# பழந்தமிழில் பதிலிடு பெயர்கள்

முனைவர் எம். சுசிலா

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005



# பழந்தமிழில்
# பதிலிடு பெயர்கள்

முனைவர் ம. சுசிலா

இணைப் பேராசிரியர். மொழியியல் துறை

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர் 613 005**

ISBN : 81-7090-382-3

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு :321
திருவள்ளுவராண்டு 2038, சித்திரை-மார்ச் 2007

| | | |
|---|---|---|
| நூல் | : | பழந்தமிழில் பதிலிடு பெயர்கள் |
| ஆசிரியர் | : | ம. சுசிலா |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | மொழியியல் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2007 |
| பக்கம் | : | 68 + 8 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரு.30/- |
| படிகள் | : | 1000 |
| ஒளியச்சு | : | பிரண்ட்லைன் கம்ப்யூட்டர்ஸ். தஞ்சாவூர். |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர் |

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
# தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

## அணிந்துரை

தமிழ் மொழி இலக்கண வரையறைகள் நிரம்பப்பெற்ற மொழியாகும். இதுவே இம்மொழியின் தொன்மைக்குப் பெரும் சான்றாகும்.

மொழிக்கூறுகள் காலந்தோறும் மாறும் தன்மை கொண்டவை. பழந்தமிழ் இலக்கியங்களில் பதிலிடு பெயர்கள் அடைந்த மாற்றங்களைப் பற்றி ஆராய்வதாக இந்நூல் அமைகின்றது.

மொழியில் ஒரு பெயருக்குப் பதிலாக வருபவையே பதிலிடு பெயர்கள் எனப்பெறும். பெயர்களைப் போலவே பதிலிடுபெயர்களும் மொழிகளின் அடிப்படைச் சொற்களாகக் கருதப்படுகின்றன. இவை அந்தந்த மொழியின் மிகப் பெரிய எண்ணிக்கையிலான பெயர்களுக்கும் பெயர்த் தொடர்களுக்கும் பதிலாக வரக்கூடியவை.

மொழியியல் துறையில் பேராசிரியையாக விளங்கும் முனைவர் எம்.சுசீலா அவர்கள் அரிதின் முயன்று இந்நூலினை உருவாக்கி அளித்துள்ளார்.

பதிலிடு பெயர்களை மூவிடப் பெயர்கள், வினாப்பெயர்கள், வரையறையில்லாப் பெயர்கள், உள்ளடக்குப் பெயர்கள், பகிர்வுப் பெயர்கள், தற்சுட்டுப் பெயர்கள், பரஸ்பரப் பெயர்கள், முழுமைப் பெயர்கள் என எட்டு வகைகளாகப் பகுத்துக் கொண்டு விரிவாக

விளக்கியிருப்பது தமிழ் மொழியின் சொல்லிலக்கண அடிப்படைக் கூறுகளைத் தெளிவுறுத்துவதாக உள்ளது. காட்டாக, காப்பிய காலத்தில் யாம் என்றும் யாங்கள் என்றும் வழங்கிய சொற்கள் இடைக்காலத் தமிழில் மாறி நாம் என்றும் நாங்கள் என்றும் விலக்கீட்டுத் தன்மைப் பன்மைச் சொல்லாக வளர்ச்சி பெற்று நிலைபெற்றது போன்ற பல பதிவுகளை இந்நூலில் ஆசிரியர் நிறுவியுள்ளார்.

இந்நூல் மொழிநூல் அறிஞர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரும் பயனளிக்கும் என நம்புகிறேன். இதனைத் தெளிவாக உருவாக்கியளித்துள்ள பேராசிரியை முனைவர் ம. சுசிலா அவர்களின் புலமையைப் பாராட்டி வாழ்த்துகிறேன். இதை அழகாக அச்சிட்ட பதிப்புத்துறையினருக்கும் பாராட்டுக்கள்.

(சி.சுப்பிரமணியம்)

**முகவுரை**

**சுருக்கக் குறியீடுகள்**

| | | |
|---|---|---|
| *1.* | பதிலிடு பெயர்கள் | *1* |
| *2.* | பழந்தமிழில் பதிலிடு பெயர்கள் | *3* |
| *3.* | பதிலிடு பெயர்களின் வகைப்பாடு | **4** |
| *3.1* | மூவிடப் பெயர்கள் | *4* |
| *3.2* | வினாப் பதிலிடு பெயர்கள் | *23* |
| *3.3* | வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள் | *30* |
| *3.4* | உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் | *31* |
| *3.5* | பகிர்வுப் பதிலிடு பெயர்கள் | *36* |
| *3.6* | முழுமைப் பதிலிடு பெயர்கள் | *36* |
| *3.7* | தான், தாம் பதிலிடு பெயர்கள் | *49* |
| *3.8* | பரஸ்பரப் பதிலிடு பெயர்கள் | *63* |

**பட்டியல்கள்**

**அடிக்குறிப்புகள்**

**துணை நூல்கள்**

# முகவுரை

''பழந்தமிழில் பதிவிடு பெயர்கள்'' என்ற தலைப்பிலான இந்த ஆய்வினை மேற்கொண்டு முடிப்பதற்கு ஊக்கம் ஊட்டி உதவிகள் செய்த எங்கள் மொழியியல் துறை ஆசிரியர் பெருமக்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆய்வினை மேற்கொள்ள வாய்ப்பும் தக்க நிதி உதவியும் அளித்து நூல் வடிவில் வெளியிடும் தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்கு எனது நன்றி என்றும் உரியது.

**சுருக்கக் குறியீடுகள்**

| | | |
|---|---|---|
| அகம் | - | அகநானூறு |
| ஐங் | - | ஐங்குறுநூறு |
| கலி | - | கலித்தொகை |
| குறள் | - | திருக்குறள் |
| குறு | - | குறுந்தொகை |
| சிலம்பு | - | சிலப்பதிகாரம் |
| சூத் | - | சூத்திரம் |
| சொல் | - | சொல்லதிகாரம் |
| தொல் | - | தொல்காப்பியம் |
| நற் | - | நற்றிணை |
| பத்து | - | பத்துப்பாட்டு |
| பரி | - | பரிபாடல் |
| புறம் | - | புறநானூறு |
| மணி | - | மணிமேகலை |

# பழந்தமிழில் பதிலிடு பெயர்கள்

## 1. பதிலிடு பெயர்கள்

எந்த ஒரு மொழியும் பெயர், வினை ஆகிய இரு சொல் வகைகளைக் கொண்டிருக்கும். இவ்விரு சொல் வகைகளில் பெயர்கள் வரும் இடங்களில் பெயருக்குப் பதிலாக வரும் சொற்களே பதிலிடு பெயர்கள் எனப்படும்[1]. பெயர்களுக்குப் பதிலாக இச்சொற்களை இட்டுக் கூறுவதனால் இவை பதிலிடு பெயர்கள் என்று அழைக்கப்படுகின்றன. பெயர்களுக்குப் பிரதியாக வருவதனால் இவை பிரதிப் பெயர்கள் எனவும் குறிக்கப்படுகின்றன.

பதிலிடு பெயர்கள் பொதுவாக ஒரு பெயருக்குப் பதிலாக வருபவையே எனினும் இவை பெயர்த்தொடருக்கும், ஒரு வாக்கியத்திற்கும்கூட பதிலாக வரக்கூடியவை.

கண்ணன் வந்தான். அவன் ஒரு நூல் வாங்கினான்

என்ற வாக்கியத்தில் கண்ணன் என்ற பெயருக்குப் பதிலாகவும், அங்கு விளையாடும் சிறுமி என் தங்கை.

அவளைக் கூப்பிடு

என்ற வாக்கியத்தில் அங்கு விளையாடும் சிறுமி என்ற பெயர்த் தொடருக்குப் பதிலாகவும், கண்ணன் பொய் சொன்னான்.

அது எனக்குப் பிடிக்கவில்லை.

என்ற வாக்கியத்தில் கண்ணன் பொய் சொன்னான் என்ற முழு வாக்கியத்திற்குப் பதிலாகவும் பதிலிடு பெயர்கள் வருவதைக் காணலாம்.

ஒரு மொழியில் பதிலிடு பெயர்களின் பங்கு மிக இன்றியமையாதது. இவை இல்லையேல் பெயர்களையே மீண்டும் மீண்டும் கூறவேண்டியிருக்கும். எடுத்துக்காட்டாக,

கண்ணன் ஒரு சிறுவன். கண்ணனுக்குத் தாய் தந்தையர் இல்லை. கண்ணன் மிக நல்லவன். அத்துடன் கண்ணன் மிகவும் புத்திசாலி.

எனப் பெயர்கள் மீண்டும் மீண்டும் வருவதைத் தவிர்க்க இயலாது. மேலும் சில வாக்கியங்களில் ஒரே பெயர் மீண்டும் கூறப்படின் பிழையாக வருவதையும் காணலாம். எடுத்துக்காட்டாக,

கண்ணன் கண்ணனுடைய அறைக்குச் சென்றான்.

என்ற வாக்கியம் தவறு. தன்னுடைய என்ற பதிலிடு பெயர் இங்கு இன்றியமையாததாகும்.

மேலும் ஒருவர் அல்லது ஒன்றின் பெயர் தெரியாத நிலையில் பதிலிடு பெயர்களையே பயன்படுத்த நேரும்.

அவர் யார்?

அது என்ன?

போன்ற வாக்கியங்களை நோக்கும் போது பதிலிடு பெயர்களின் இன்றியமையாமை நன்கு புலப்படுகிறது. ஆகவேதான், பெயர்களைப் போன்றே பதிலிடு பெயர்களும் மொழிகளின் அடிப்படைச் சொற்களாகக் கருதப்படுகின்றன.

ஆயினும், பதிலிடு பெயர்கள் பெயர்களுக்கு முற்றிலும் இணையானவை அல்ல. முதலாவதாக, எந்தவொரு மொழியிலும் பதிலிடு பெயர்கள் ஒரு சிறிய எண்ணிக்கையிலேயே இருக்கும்.

இவை அந்தந்த மொழியின் மிகப் பெரிய எண்ணிக்கையிலான பெயர்களுக்கும், பெயர்த்தொடர்களுக்கும் பதிலாக வரக் கூடியவை.

இரண்டாவதாக, அவற்றில் பெயர்களுக்குரிய அனைத்துப் பண்புகளும் இருப்பதாகக் கூற இயலாது. பெயர்கள் சுட்டுகளையும், அடைகளையும் எடுத்துவருவது போன்று இவை எடுத்து வருவதில்லை.

- ஒரு அவன்
- மூன்று அவர்கள்
- நல்ல நாள்
- பெரிய நீ

என்றெல்லாம் கூற முடியாது.

மூன்றாவதாக, பதிலீடு பெயர்கள் விளிப்பெயர்களாகவும் வர இயலாது.

## 2. பழந்தமிழில் பதிலிடு பெயர்கள்

மொழிக்கூறுகள் காலந்தோறும் மாறும் தன்மை என்பது யாவரும் அறிந்த ஒன்று. பதிலிடு பெயர்களும் இவ்வரலாற்று மாற்றங்களுக்கு விலக்கல்ல. எனவே, பழந்தமிழ் இலக்கியங்களான பதிற்றுப்பத்து (பதி), ஐங்குறுநூறு (ஐங்), அகநானூறு (அகம்), நற்றிணை (நற்), குறுந்தொகை (குறு), புறநானூறு (புறம்), பத்துப்பாட்டு (பத்து), பரிபாடல் (பரி), கலித்தொகை (கலி), திருக்குறள் (குறள்), சிலப்பதிகாரம் (சிலம்பு), மணிமேகலை (மணி) ஆகியவற்றில் இவற்றின் தன்மை பற்றியும், இவை அடைந்த மாற்றங்கள் பற்றியும் ஆராய்வதே இந்நூலின் நோக்கம்.

பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் இவற்றிற்கென தனியொரு பெயர் தராவிடினும் பல்வேறு சூத்திரங்களில் இவற்றின் இயல்பு பற்றி விவரித்துள்ளது.

## 3. பதிலிடு பெயர்களின் வகைப்பாடு

பதிலிடு பெயர்களை மூவிடப் பெயர்கள், வினாப் பெயர்கள், வரையறையில்லாப் பெயர்கள், உள்ளடக்குப் பெயர்கள், பகிர்வுப் பெயர்கள், தற்சுட்டுப் பெயர்கள், பரஸ்பரப் பெயர்கள், முழுமைப் பெயர்கள் என எட்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

### 3.1. மூவிடப் பெயர்கள்

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகியவற்றைக் காட்டும் பதிலிடு பெயர்களே மூவிடப் பெயர்கள் எனப்படும்.

#### *3.1.1. தன்மைப் பதிலிடு பெயர்கள்*

தன்மையை அதாவது பேசுபவரை அல்லது பேசுபவரை உள்ளிட்ட சிலரைக் குறிப்பதே தன்மைப் பதிலிடு பெயர்கள். இவை எண் மட்டும் காட்டுமேயன்றிப் பால் காட்டுவதில்லை.

##### *3.1.1.1. தன்மை ஒருமை*

பேசுபவர் தன்னைப் பற்றிக் குறிக்கும் பதிலிடு பெயரே தன்மை ஒருமைப் பதிலிடு பெயர் (தன்+மை). தன்மை ஒருமைப் பதிலிடு பெயர் பயனிலையில் இயைபு (Concord) காட்டி வரும். ஏன் என்ற விகுதி தன்மை ஒருமை விகுதியாகும்.

நான் வந்தேன்.

பல இடங்களில் படர்க்கைப் பெயருடன் 'ஏன்' விகுதி இணைந்து வருவதையும் காணலாம். எடுத்துக்காட்டாக, தொலைபேசியில் பேசும் ஒருவர்,

கண்ணன் பேசுகிறேன்

என்றும், மேடைப்பேச்சில் ஒருவர்

உங்கள் நண்பன் பேசுகிறேன்

என்றும், தாய் குழந்தையிடம்

அம்மா பாடம் சொல்லிக் கொடுக்கிறேன்

என்றும், தன்னைக் குறிக்கும் படர்க்கைப் பெயருடன் 'ஏன்' விகுதி இணைத்துக் கூறுவதைக் காணமுடியும். இவற்றில் விகுதியே பதிலிடு பெயரை இனம் காட்டுவதாக அமைகிறது.

தொல்காப்பியம் இதனைத் தன்மைச் சொல் (சூத், 43) என்று குறிப்பிட்டு 'யான்' என்ற சொல்லைத் தன்மை ஒருமை குறிக்கும் சொல்லாகக் கூறுகிறது.

''யான்யாம் நாமென வரூஉம் பெயரும்'' (தொல். சூத். 159)

மேலும், யான், யாம், நாம் ஆகிய மூன்றையும் பால் குறிக்கும் சொல்லாக தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

''பாலறி வந்த உயர்திணைப் பெயரே'' (சொல். சூத். 159)

உரையாசிரியர்களுள் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் இதன் பால் காட்டாத் தன்மையை உணர்ந்து இவ்வடிக்கு ''யானென்பது, ஒருவன் ஒருத்தியென்றுப் பகுதி யுணர்த்தா தாயினும், அத்திணையொருமை உணர்தலின் பாலறி வந்தவெனப் பன்மை பற்றிக் கூறினாரெனினுமமையுமாம்'' (சேனா. சூத். 162) எனவும், ''யான், யாம், நாம் என இருபாற்கும் பொதுவேனும் குறிப்பால் உணர்ந்துழி ஒரு பால் உணர்த்தியே நிற்றலின் பால் அறிய வந்த உயர்திணைப் பெயராயிற்று'' (நச். சூத். 164) எனவும் விளக்கம் கூறுவர்.

பழந்தமிழ் இலக்கியங்களில் தன்மை ஒருமைச் சொல் உயர்திணை மட்டுமே குறித்துவரக் காண்கிறோம்.

தொல்காப்பியம் தன்மை ஒருமை விகுதிகளாக -என், ஏன், அன், அவ், கு, டு, து, று ஆகிய எட்டு விகுதிகளைக் குறிப்பிடுகிறது (தொல். சூத். 200). பழந்தமிழ் இலக்கியங்களில் 'யான்' என்னும் தன்மைப் பதிலிடு பெயர் இவ்வெட்டு விகுதிகளையும் கொண்டு முடியக் காண்கிறோம். தொல்காப்பியம் 'யான்' என்ற ஒரு சொல்லை மட்டுமே தன்மை ஒருமைச் சொல்லாகக் குறிப்பிட்டிருப்பினும் பழந்தமிழ் இலக்கியங்களில்

யான், நான் ஆகிய இரு சொற்களுமே தன்மை ஒருமை குறித்து வந்துள்ளன. இவற்றுள் 'யான்' பெருமளவில் காணப்பட 'நான்' பன்னிரண்டு (பரி 1, சிலம்பு 7, மணி 3) இடங்களில் மட்டுமே வந்துள்ளது.

**யான்**

நோகோ யானே ..................... பதி 26.5
................ கண்டனென் யானே அகம் 14.17

**நான்**

பன்மைச் சொல்லான 'நாம்' என்ற சொல்லின் தாக்கத்தினால் 'நான்' என்ற சொல் தோன்றியது எனலாம். இச்சொல் பின் பழந்தமிழ் நூல்களான பரிபாடல் (1), சிலப்பதிகாரம் (7), மணிமேகலை (3) ஆகிய மூன்று நூல்களில் மட்டுமே வந்துள்ளது. காலப்போக்கில் வரவு எண்ணிக்கையில் பெருகி தமிழ் மொழியில் நிலைபெற்றது.

கதுவா யவன் கள்வன் கள்ளிநா னல்லேன்
பரி. 20.82
தொடிவளைத் தோளிக்குத் தோழி நான் கண்டீர்
சிலம்பு 20-2-2.4
நல்லாய் ஆணுரு நான்கொண் டிருந்தேன்
மணி. 23.95

'யான்' என்ற தன்மைச் சொல்லின் வேற்றுமை அடி 'என்' என்பதாகும். இது எவ்வித வரலாற்று மாற்றமுமின்றிப் பயின்று வருகிறது.

எல்லினிற் பெயர்தல் எனக்குமா ரினிதே
அகம். 100.4
எனக்குநீ யுரையா யாயினை .............
நற். 128.3

**3.1.1.2. தன்மைப் பன்மை**

தன்மைப் பன்மை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

(inclusive plural) எனவும் விலக்கீட்டுத் தன்மைப் பன்மை (exclusive plural) எனவும் இரு வகைப்படும். உளப்பாட்டுத் தன்மைப் பன்மை பேசுபவரையும் கேட்பவரையும் குறிக்கும். சில நேரங்களில் இருவரோடு வேறு சிலரையும் உள்ளிட்டுக் குறிக்கும்.

நாம் வந்தோம்.

இதில் 'நாம்' என்பது பேசுபவர் + கேட்பவர் (படர்க்கைப் பெயர்கள்) ஆகியோரைக் குறிக்கும்.

விலக்கீட்டுத் தன்மைப் பன்மை கேட்பவரை விலக்கிவிட்டு பேசுபவரையும் அவரை உள்ளிட்ட சிலரையும் குறிக்கும்.

நாங்கள் வந்தோம்.

இதில் 'நாங்கள்' என்பது பேசுபவர் + படர்க்கைப் பெயர்கள் ஆகியோரைக் குறிக்கும்.

இவ்விரு வகைத் தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர்களும் -'ஓம்' என்ற ஒரே விகுதியையே பயனிலையில் கொண்டுள்ளன.

நாம் ⎤
      ⎥ - வந்தோம்
நாங்கள் ⎦

ஒரு சில அமைப்புகளில் பேசுபவரை உள்ளிட்டுக் கூறுவதையும், விலக்கிக் கூறுவதையும் சார்ந்து விகுதிகள் மாறிவரும்.

நம்மில் பலர் பொருளை இழந்தோம்.

நம்மில் பலர் பொருளை இழந்தார்கள்.

தன்மைப் பதிலிடு பெயருடன் முன்னிலை, படர்க்கைப் பதிலிடு பெயர்கள் வரும்போது தன்மைப் பன்மை விகுதிகளே வரும்.

நானும் நீயும் போவோம்

நானாவது நீயாவது போவோம்

நானும் அவனும் போவோம்

நானாவது அவனாவது போவோம்

தொல்காப்பியம் 'யாம்', 'நாம்' ஆகிய இரு சொற்களையும் குறிப்பிட்டுள்ளது.

யான் யாம் நாமென வரூஉம் பெயரும் ..............
*(தொல். சொல். சூத். 159)*

இவ்விரண்டிற்கும் எவ்வித வேற்றுமையையும் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஆயினும், உரையாசிரியர்களுள் நச்சினார்க்கினியர் 'யாம்' என்பது ''படர்க்கை உளப்பாட்டுத் தன்மைப் பெயர்'' என்றும், 'நாம்' என்பது முன்னிலை உளப்பாட்டுத் தன்மைப் பெயர் என்றும் குறிப்பிடுகிறார். பழந்தமிழ் இலக்கியங்களில் 'யாம்' என்ற சொல் பெருமளவில் விலக்கீட்டுத் தன்மைப் பன்மையும், ஒரு சில இடங்களில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையும் குறித்துவர 'நாம்' என்ற சொல் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையை மட்டுமே குறித்துவரக் காண்கிறோம்.

இவை தவிர இவ்விரு சொற்களுமே உயர்திணை ஒருமை குறித்தும் வந்துள்ளன.

தொல்காப்பியம் தன்மைப் பன்மை விகுதிகளாக -எம், -ஏம், -அம், -ஆம், -ஓம், -கும், -டும், -தும், -றும் ஆகிய ஒன்பது விகுதிகளைக் குறிப்பிட்டுள்ளது *(தொல்.சொல்.சூத். 199).*

பழந்தமிழ் இலக்கியங்களில் 'நாம்', 'யாம்' ஆகிய இரு பதிலிடு பெயர்களும் இவ் ஒன்பது விகுதிகளையும் கொண்டு முடியக் காண்கிறோம். விகுதிகளில் உளப்பாட்டுத் தன்மை, விலக்கீட்டுத் தன்மை வேறுபாடு காணப்படுவதில்லை.

*யாம்*

'யாம்' என்ற பதிலிடு பெயர் பழந்தமிழ் இலக்கியங்களில் 250-க்கும் அதிகமான இடங்களில் வந்துள்ளது. இவற்றுள் 20 இடங்களில் மட்டும் உளப்பாட்டுத் தன்மைச் சொல்லாகவும் எஞ்சிய இடங்களில் உயர்திணை ஒருமை (honorific singular) அல்லது விலக்கீட்டுத் தன்மைச் சொல்லாகவும் வந்துள்ளது.

**விலக்கீட்டுத் தன்மைப் பன்மை**

*யாமுஞ் சேறுகம் ................. பதி. 49.1*
*............. அறியாமோ யாமே அகம். 80.4*

**உளப்பாட்டுத் தன்மைப் பன்மை**

*............................. யாம்*
*....................................*
*அடக்குவம் ...................... அகம். 328.9.11*

**உயர்திணை ஒருமை**

இச்சொல் பல இடங்களில் உயர்வு ஒருமைச் சொல்லாக தலைவன், தலைவி, புலவர் ஆகியோர் தம்மைக் குறித்துப் பயன்படுத்தும் சொல்லாக வந்துள்ளது.

*.................... யாமே*
*......................*
*......................*
*......................*
*....................சேர்ந்தனம்... அகம் 43.8.12*

*வருதும் யாம் ........ அகம் 85.14*

பின் பழந்தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் 'யாம்' என்ற சொல்லுடன் பன்மை விகுதியான 'கள்' இணைந்து 'யாங்கள்' என்ற சொல் வரக் காண்கிறோம். இடைக்காலத் தமிழில் இச்சொல் எண்ணிக்கையில் மிகுந்துவரினும் பின்னர் 'நாம்' என்ற சொல்லுடன் 'கள்' விகுதி

இணைந்து தோன்றிய 'நாங்கள்' என்ற சொல்லே விலக்கீட்டுத் தன்மைப் பன்மைச் சொல்லாக வளர்ச்சி பெற்று தமிழ் மொழியில் நிலைபெற்றது.

**யாங்கள்**

இச்சொல் சிலப்பதிகாரம் (2), மணிமேகலை (1) ஆகிய இரு நூல்களில் மட்டுமே காணப்படுகிறது.

........ யாங்களு நீணெறிப் படர்குதும். சிலம்பு 11.161
காண்குவம் யாங்களுங் காட்டுவாயாக... மணி 16.82

யாம் என்ற சொல்லின் வேற்றுமை அடிச்சொல் 'எம்' என்பது ஆகும். இதுவும் விலக்கீட்டுப் பன்மைச் சொல்லாகவும், உயர்வு ஒருமையாகவும் பழந்தமிழ் இலக்கியங்களில் வந்தள்ளது.

**விலக்கீட்டுப் பன்மை**

நல்கினை யாகுமதி யெம்... பதி 53.3

...................... எங்கோ
......................
...................... பாரி பதி 61.6-8

**உயர்வு ஒருமை**

...................... எம்
முதுமை யெள்ளல்... அகம் 6.14-15
எம்மினும் விரைந்துவந் தெய்தி... அகம் 9.17

'எம்' என்ற சொல்லுடன் பன்மை விகுதி 'கள்' இணைந்து 'எங்கள்' என்ற சொல் இடைக்காலத் தமிழில் தோன்றி வளர்ந்தது. யாம், யாங்கள் ஆகிய சொற்கள் மறைந்தபோதும் இவற்றின் வேற்றுமை அடியான 'எங்கள்' என்ற சொல் வரலாற்று மாற்றத்திற்கு உட்படாமல் மொழியில் நிலைபெற்றது.

**நாம்**

இச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் 120-க்கும் அதிகமான இடங்களில் வந்துள்ளது. இது உளப்பாட்டுத் தன்மைப்

பன்மையாகவும், உயர்வு ஒருமைச் சொல்லாகவும் வரக் காண்கிறோம்.

**உளப்பாட்டுத் தன்மைப் பன்மை**

*........... தோழி நாஞ் சென்மோ அகம் 32.17*
*பலகேட் டனயால் தோழி நாமே அகம் 210.14*

'யாம்', 'நாம்' ஆகிய இரு பதிலிடு பெயர்களும் ஒரே பாடலில் பயின்று வருவதையும் சில இடங்களில் காண்கிறோம்.

*..................... தோழிநாஞ் சென்மோ*
*.....................*
*.....................*
*.....................*
*.....................*
*அண்கணாளனை நகுகம் யாமே அகம் 37.17-21*

**உயர்வு ஒருமை**

*பிழையவண் மாதோ பிரிதுநா மெனினே அகம் 5.28*
*நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி அகம் 198.3*

'நம்' என்ற சொல்லுடன் 'கள்' விகுதி இணைந்து 'நங்கள்' என்ற சொல் இடைக்காலத் தமிழில் தோன்றினாலும் இச்சொல் இடைக்காலத் தமிழிலேயே மறைந்து 'நம்' என்ற சொல்லே மொழியில் நிலைபெற்றது.

**3.1.2. முன்னிலைப் பதிலிடு பெயர்கள்**

யாரிடம் பேசுகிறோமோ அவரைக் குறித்துநிற்பது முன்னிலைப் பதிலிடு பெயர் ஆகும். இவையும் எண் மட்டுமே காட்டுமேயன்றிப் பால் காட்டுவதில்லை.

**3.1.2.1. முன்னிலை ஒருமை**

தமிழ்மொழியில் 'நீ' என்பது முன்னிலை ஒருமையைக் குறிக்கும் பதிலிடு பெயர். தொல்காப்பியம் முன்னிலைச் சொற்களாக நீ, நீயிர் ஆகிய இரு சொற்களையும் கூறி இவை

உயர்திணை, அஃறிணை இரண்டையும் குறித்துவரும், இவை பால் காட்டுவதில்லை எனக் குறிப்பிடுகிறது.

''... நீயிர் நீயெனக் கிளந்து'' (சூத். 171)
''நீயிர் நீயென வருஉங் கிளவி
பால்தெரி பிலவே உடன்மொழிப் பொருள'' (சூத்.185)
''நீயென் கிளவி ஒருமைக் குரித்தே'' (சூத். 186)
''ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே'' (சூத். 187)

தொல்காப்பியம் 'ஐ', 'ஆய்' ஆகிய இரண்டையும் முன்னிலை ஒருமை விகுதிகளாகக் குறிப்பிட்டுள்ளது. இவை இரண்டும் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்றன.

**ஒருமை**

நீசிவந் திறுத்த நீரழி பாக்கம் பதி. 13.12
நல்வரை நாட நீ வரின் அகம் 12.13

'நீ' என்ற சொல் எவ்வித வரலாற்று மாற்றத்திற்கும் உட்படவில்லை. ஆயினும், இதன் வேற்றுமை அடிச்சொல்லான 'நின்' வரலாற்று மாற்றங்களை அடைந்துள்ளது. 'நின்' என்ற சொல் இதன் பன்மை வடிவமான 'நும்' என்ற சொல்லின் தாக்கத்தினால் 'உன்' என்ற மாற்றம் பெற்றது.

நின் → நுன் → உன் (சொல் முதல் 'ந' இழப்பு)

பழந்தமிழ் இலக்கியங்களில் நின், உன் ஆகிய இரு சொற்களே காணப்படுகின்றன. இவற்றுள் 'நின்' என்ற சொல் பெருமளவில் காணப்படுகிறது. இச்சொல் 1240 இடங்களில் காணப்பட 'உன்' என்ற சொல்லோ 29 இடங்களில் மட்டுமே காணப்படுகிறது (அகம்1, சிலம்பு 6, மணி 22).

**நின்**

.................. நின்
பலர் புகழ் செல்வ மினிதுகண் டிகுமே பதி. 11.19.20

.................. நின்மலைப்
பல்வேறு விலங்கு மெய்துநாட அகம் 2.8-9

**உன்**

.................. உன்
மேனி ஆய்நலந் தொலைதலின்... அகம் 222.2-3

### 3.1.2.2. முன்னிலைப் பன்மை

முன்னரே குறிப்பிட்டபடி தொல்காப்பியம் முன்னிலைப் பன்மைச் சொல்லாக 'நீயிர்' என்ற சொல்லை மட்டுமே குறிப்பிட்டிருப்பினும் நீர், நீஇர், நீயிர் ஆகிய மூன்று சொற்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

| | நீர் | நீயிர் | நீஇர் |
|---|---|---|---|
| பதி | - | 1 | - |
| ஐங் | 1 | - | - |
| அகம் | 1 | 2 | - |
| நற் | 1 | - | - |
| குறு | - | - | - |
| புறம் | 2 | - | 1 |
| பத்து | 1 | 3 | - |
| பரி | 1 | - | - |
| கலி | 7 | - | - |
| குறள் | 3 | - | - |
| சிலம்பு | 13 | 1 | - |
| மணி | - | 2 | - |

இர், ஈர் ஆகிய இரு விகுதிகளையும் முன்னிலைப்

பன்மை விகுதிகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவ்விரு விகுதிகளுமே பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

முன்னிலைப் பெயர்களுடன் படர்க்கைப் பெயர்களையும் இணைத்துக் கூறும்போது முன்னிலை விகுதிகளே பயன்படுத்தப் படுகின்றன.

*நீயும், அவனும் வந்தீர்கள்*

முன்னிலைப் பெயர்களை உளப்படுத்திக் கூறுவதையும், விலக்கிக் கூறுவதையும் சார்ந்து பல வாக்கியங்களில் விகுதிகள் மாறிவரக் காணலாம்.

*உங்களில் பலர் பணத்தை இழந்தீர்கள்*

*உங்களில் பலர் பணத்தை இழந்தார்கள்*

நீர், நீயிர், நீஇர் ஆகிய சொற்கள் உயர்வு ஒருமையையும் குறித்து வந்துள்ளன.

**பன்மை**

*யாமுஞ் சேறுக நீயிரும் வம்மின்* — *பதி. 49.1*

*நெறிகெட விலங்கிய நீயி ரிச்சுர*
*மறிதலு மறிதிரோ ................* — *அகம் 8.17-18*

**உயர்வு ஒருமை**

*நல்லோர்க் கொத்தனிர் நீயிர் ...* — *அகம் 26.19*

*சென்றுநீ ரவணி ராகி நின்றுதரும்*
*நிலையரும் பொருட்பிணி நினைந்தனி ரெனினே*
*அகம் 271 9-10*

'நீர்' என்ற சொல்லின் வேற்றுமை அடி 'நும்' என்பது ஆகும்.

*கொலைவல் வாழ்க்கைநுங் கிளையினி*
*துணீஇயர்* — *பதி. 49.3*

தண்ணருங் கானல் வந்துறும்
வண்ண மெவனோ வென்றனிர் செலினே *அகம் 30.14-15*

இச்சொல்லும் சொல் முதல் 'ந' இழந்து 'உம்' என்று மாற்றம் பெற்றது. இச்சொல்லும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகிறது.

...................... உம்மோடு
ஆடினம் வருதலின் ...... *நற் 368. 3-4*

சான்றீ ருமக்கொன் றறிவுறுப்பேன்... *கலி 139.4*

இவ்வேற்றுமைஅடி வடிவத்தின் தாக்கத்தினால் 'நீர்' என்ற சொல் 'நீங்கள்' என்ற சொல்லாக மாறி மொழியில் நிலைபெற்றது.

*நும்+கள் (நுங்கள்)*

*உம்+கள் (உங்கள்)*

*நீர் → நீம் → நீம்+கள் (நீங்கள்)* ஆயினும் 'நீம்' என்ற வடிவம் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை.

'நும்' என்ற சொல் உயர்வு ஒருமையாகவும் பழந்தமிழ் இலக்கியங்களில் வந்துள்ளது. ஒரே பாடலில் நும், நின் ஆகிய இரு சொற்களும் வருவதையும் பல இடங்களில் காணலாம்.

யாம நும்மொடு கழிப்பி ................
.........................................
.........................................
................... சிறுநெறி வருதனீயே *அகம் 168. 1-14*

இங்கு தலைவி, தலைவனை முதல் வரியில் 'நும்' என்றும், இறுதி வரியில் 'நீ' என்றும் குறிப்பிடுகிறாள்.

பதிலிடு பெயர்களில் தன்மை, முன்னிலைப் பெயர்களே அதிகமான வரலாற்று மாற்றங்களை அடைந்துள்ளன எனலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| யான் | என் | யாம் | எம் | நம் |
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |
| நான் | என் | யாங்கள் | எங்கள் | நங்கள் |
| | | | | ↓ |
| | | | | நம் |

| | | | |
|---|---|---|---|
| நீ | நின் | நீர் | நும் |
| ↓ | ↓ | ↓ | ↓ |
| நீ | நுன் | (நும்) | உம் |
| | ↓ | ↓ | ↓ |
| | உன் | நீங்கள் | உங்கள் |

### 3.1.3. படர்க்கைப் பதிலிடு பெயர்கள்

இருவர் பேசும்போது பேசுபவர், கேட்பவர் இருவரையும் தவிர்த்து வேறொருவரைச் சுட்டிக் குறிப்பிடும் பதிலிடு பெயர்களே படர்க்கைப் பதிலிடு பெயர்கள் எனப்படுகிறது. பொருளை அல்லது மனிதரை சுட்டி நிற்பதால் இவை சுட்டுப்பதிலிடு பெயர்கள் என்றும் கூறப்படுகின்றன. இவை நேர்ச்சுட்டு (diectic) என்றும் பதிலிடு சுட்டு (anaphoric) என்றும் இருவகைப்படும். பொதுவாக நேர்ச்சுட்டுகள் சுட்டுப்பெயர்கள் எனவும், பதிலிடு சுட்டுகள், பதிலிடு பெயர்கள் எனவும் குறிக்கப்படுகின்றன.

ஒரு பொருளை அல்லது மனிதரை சுட்டிக்காட்டிக் குறிப்பிடும் பெயர்களே நேர்ச்சுட்டுப் பெயர்கள் எனப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

அவனைப் பார்

இவள் கண்ணகி

போன்ற வாக்கியங்களில் வரும் அவன், இவள் ஆகியவை நேர்ச்சுட்டுப் பெயர்கள். இவை குறிக்கப்படும் பெயரின் பால், எண் தவிர்த்து வேறு எதுவும் உணர்த்துவதில்லை.

முன்னரே குறிப்பிட்டபடி ஒரு பெயருக்குப் பதிலாக

இட்டுக் கூறப்படும் பெயர்கள் பதிலிடு சுட்டுப்பெயர்கள் எனப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

என் புத்தகம் மேசை மேல் இருக்கிறது. அதை எடுத்துவா.

இவ்வாக்கியத்தில் 'அது' என்ற பதிலிடு பெயர் 'என் புத்தகம்' என்ற பெயருக்குப் பதிலாக வந்துள்ளது. இவ்வகைப் பதிலிடு பெயர்கள் பால், எண் தவிர்த்து குறிப்பிடும் பெயர் என்ன, யார் என்ற கூடுதலான ஒரு செய்தியையும் உள்ளடக்கியுள்ளன.

பொதுவாக, வாக்கியங்களில் பெயர் முன்னரும், பதிலிடு பெயர் பின்னரும் வருவதையே காணலாம். ஒருசில வாக்கிய அமைப்புகளில் மட்டுமே இந்த வரிசை முறை மாறி வரும். எடுத்துக்காட்டாக,

> அவனுக்கு பத்தாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று கண்ணனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

என்ற வாக்கியத்தில் பதிலிடு பெயர் முன்னரும், தலைமைப் பெயர் பின்னரும் வரக்காணலாம்.

சுட்டுப்பெயர்களை சேய்மைச்சுட்டுப்பெயர், அண்மைச் சுட்டுப்பெயர், இடைச்சுட்டுப் பெயர் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். தமிழ்மொழியில் நேர்ச்சுட்டுப் பெயர்களே பதிலிடு சுட்டுக்களாகவும் பயன்படுகின்றன.

தொல்காப்பியம் நேர்ச்சுட்டு, பதிலிடு சுட்டு எனப் பிரிக்காவிடிலும், (பெயர்களை இயற்பெயர், சுட்டுப்பெயர் எனப் பிரித்து), அண்மை, சேய்மை, இடைச்சுட்டுப் பெயர்களைக் குறிப்பிடுகிறது.

''இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்''
(சொல். சூத்.39)

''அவனிவன் உவனென வரூஉம் பெயரும்

அவை முதலாகிய ஆய்தப் பெயரும்

அவை யிவை உவையென வரூஉம் பெயரும்
(சொல்.சூத். 164)

### 3.1.3.1. சேய்மைச் சுட்டுப் பெயர்கள்

தொலைவில் இருக்கும் ஒரு பொருளைக் குறித்து வரும் பெயர்கள் சேய்மைச் சுட்டுப் பெயர்கள் எனப்படும். ஆயினும், பழந்தமிழ் நூல்களில் இவை பெரும்பாலும் பதிலிடு சுட்டுகளாகவே வந்துள்ளன. ஆகவே, பதிலிடு சுட்டுகளே எடுத்துக் காட்டுகளாகத் தரப்பட்டுள்ளன.

#### 3.1.3.1.1. ஆண்பால் ஒருமை

தமிழ் மொழியில் 'அவன்' என்பது ஆண்பால் ஒருமை குறிக்கும் சுட்டுப்பெயராகும்.

கடம்புமுத றடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேர லாதன் வாழ்கவன் கண்ணி பதி 20.4-5

உறற்கரி தாகுமவன் மலர்ந்தமார்பே அகம் 28.14

#### 3.1.3.1.2. பெண்பால் ஒருமை

'அவள்' என்பது பெண்பால் ஒருமைப் பதிலிடு பெயராகும்.

அவள் துணிவு அறிந்தனென் ஆயிள்...... அகம் 263.10

பெருநீர் வையை அவளொ டாடி அகம் 296.5

#### 3.1.3.1.3. பலர் பால்

பழந்தமிழில் பலர்பால் அதாவது உயர்திணைப் பன்மையைக் குறிக்கும் பலர்பால் சொல் 'அவர்' என்பதாகும்.

.............................. அவர்
வாடா யாணர் நாடுநிறை கொடுப்ப பதி 53.1-2

இமிழ்கல் முழவின் இன்சீர் அவர்மனைப்
பயிர்வன போல வந்திசைப்பவும் ........ அகம் 66.22-23

இச்சொல் பழந்தமிழில் உயர்வு ஒருமையையும் குறித்து வந்துள்ளது.

அவரும் பெறுகுவர் மன்னே .............. பதி 11.11

### 3.1.3.1.4. ஒன்றன்பால்

அது, அஃது ஆகியவை ஒன்றன் பாலைக் (அஃறிணை ஒருமையை) குறிக்கும் சொற்கள் ஆகும்.

இன்னா தம்மவது தானே ............ பதி 83.6

இம்மனை அன்றஃ தும்மனை........ அகம் 56.14

### 3.1.3.1.5. பலவின் பால்

அவை என்ற சொல் பலவின் பாலைக் (அஃறிணைப் பன்மையை) குறிக்கும் சொல் ஆகும்.

சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்
றைந்துடன் போற்றி யவைதுணை யாக பதி 21 1-2

தொல்காப்பியம் 36-ஆவது சூத்திரத்தில் பதிலிடு பெயர்களும், அவை சுட்டும் பெயர்களும் வரக்கூடிய வரிசை முறையைக் குறித்துக் கூறுகிறது.

''இயற் பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழி யென்மனார் புலவர்'' (சொல்.சூத்.36)

ஆயினும் செய்யுள் இலக்கியங்களில் சுட்டுப் பெயர்க்கிளவி முன்னரும், இயற்பெயர் பின்னரும் வரலாம் என்று மற்றொரு சூத்திரம் கூறுகிறது.

முற்படக் கிளத்தல் செய்யுளு க்குரித்தே சொல்.சூத்.39)

பழந்தமிழ் இலக்கியங்களில் மிகப்பெரும்பாலான இடங்களில் தலைமைப் பெயர் முன்னரும், பதிலிடு பெயர் பின்னரும் வரக் காண்கிறோம். ஒருசில இடங்களில் மட்டுமே இவை வரிசைமுறை மாறி வந்துள்ளன. மேலும் சில இடங்களில் இவை தலைமைப்பெயரே இன்றி அவன், அவர், அவள்

ஆகியவை தலைவன், தலைவியைப் பொதுவாகச்சுட்டுவனவாக வந்துள்ளன.

**தலைமைப் பெயர் - பதிலிடு பெயர்**

*துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்*
*.......................................*
*................................ அவன்*
*தாவா வஞ்சின முரைத்தது* குறு 36.2-5

**பதிலிடு பெயர் - தலைமைப்பெயர்**

*.......................அவன் மார்பு*
*உறுகவென்ற நாளே குறுகி*
*.......................................*
*.......................................*
*.......................................*
*.......................துறைவனைப்*
*பெரிய கூறி யாய் அறிந் தனளே* குறு 248.1-7

**3.1.3.2. அண்மைச் சுட்டுப் பெயர்கள்**

மிக அருகில் இருக்கும் ஒரு பொருளைச்சுட்டிக் கூறுபவை அண்மைச் சுட்டுப் பெயர்கள் எனப்படும். பழந்தமிழில் இவை குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் நேர்ச்சுட்டாகவே வந்துள்ளன.

**3.1.3.2.1. ஆண் பால் ஒருமை**

*கல்லா வாய்மைய னிவனென..........* பதி 48.7

*நீயும் தாயை இவற்கென................* அகம் 16.13

**3.1.3.2.2. பெண் பால் ஒருமை**

*வேயுறழ் பணைத்தோ ளிவளோடு* பதி 21.37

*இவளு மினைய ளாயின்.............* அகம் 21.13

### 3.1.3.2.3. பலர் பால்

.................................இவர்
கொள்ளாப் பாடற் கெளிதினி னீயும் பதி 48.6-7

.................................இவர்
மனமகிழியற்கை காட்டி யோயே குறு 229.6-7

இச்சொல் உயர்வு ஒருமையாகவும் வந்துள்ளது.

இவர்யா ரென் குவ னல்லன்.......... நற் 6.6

### 3.1.3.2.4. ஒன்றன் பால்

இது, இஃது ஆகியவை ஒன்றன் பால் அண்மைச் சுட்டுச் சொற்கள்.

வருவ ராயின் பருவம் இதுவென அகம் 68.11

அஞ்சுவ ளல்லளோ விவரிது செயலே அகம் 15.16

இஃது என்ற சொல் ஆண்பால், பெண்பால் சொற்களுக்கு முன்னர் வருவதைக் கலித்தொகையில் காண முடிகிறது.

என்செய்தான் கொல்லோ இஃதொத்தன் கலி 60.9

அஞ்சா அழாஅ அரற்றா இஃதொத்தி கலி 143.8

### 3.1.3.2.5. பலவின் பால்

'இவை' என்ற சொல் அண்மைப் பலவின்பாலைக் காட்டும்.

இவைபா ராட்டிய பருவமு முளவே...... அகம் 26.11

### 3.1.3.3. இடைச்சுட்டுப் பெயர்கள்

பொதுவாக, இடைச்சுட்டுப் பெயர்கள் சேய்மைக்கும் அண்மைக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள பெயர்களைக் குறிப்பிடுவனவாகக் கருதப்படுபவை. 'இவை இன்று வழக்கில் இல்லை. பழந்தமிழிலும் இவை மிகக் குறைந்த எண்ணிக்கை-

யிலேயே காணப்படுகின்றன. உவன், உவள் ஆகியவை நேர்ச் சுட்டாக இரு இடங்களிலும் (பரி 11.123, 12.55), பதிலிடு சுட்டாக ஒரு இடத்திலும் (நற் 127.3) வரக்காண்கிறோம். உவர், உவை ஆகியவை காணப்படவில்லை. 'உது' என்ற சொல் 24 இடங்களில் காணப்படுகிறது. இதுவே, உண்மையில் சேய்மைக்கும் அண்மைக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள பெயரைக் குறிப்பதாக வந்துள்ளது.

### 3.1.3.3.1. ஆண்பால் ஒருமை

'உவன்' என்ற சொல் ஆண்பால் ஒருமை இடைச் சுட்டுச்சொல் ஆகும். இது நற்றிணையில் ஒரு இடத்தில் பதிலிடு சுட்டாக வருவதைக் காண்கிறோம்.

உவன் வரின் எவனோ பாண ............. நற் 127.3

பரிபாடலில் ஒரு இடத்தில் நேர்ச்சுட்டாக வந்துள்ளது.

பூணார நோக்கிப் புணர்முலை பார்த்தானுவன் பரி 12.55

### 3.1.3.3.2. பெண்பால் ஒருமை

இது பெண்பால் ஒருமை இடைச்சுட்டுச் சொல். நேர்ச்சுட்டாகவே வந்துள்ளது.

.................... உவள்கண் காண்மின் பரி 11.123

### 3.1.3.3.3. பலர் பால்

பலர்பால் குறிக்கும் சொல்லாக உவர் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை.

### 3.1.3.3.4. ஒன்றன் பால்

'உது' என்ற சொல் ஒன்றன் பால் இடைச்சுட்டுச்சொல். முன்னரே குறிப்பிட்டபடி இதுவே சேய்மைக்கும் அண்மைக்கும் இடையில் உள்ள பெயரைச் சுட்டுவதாக வந்துள்ளது. அதாவது பார்வையில் தெரியக்கூடிய ஆனால் அண்மையில் இல்லாத பெயரைச்சுட்டுவதாக இச்சொல் வந்துள்ளது.

..........................உதுக்காண் நற் 21.5

.................... உது வெம்மூரே குறு 179.3

### 3.1.3.3.5. பலவின் பால்

'உவை' என்ற சொல் பலவின்பால் இடைச்சுட்டுச்சொல். இது பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை.

பதிலிடு பெயர்கள் பெயர்களைப் போன்று எண்ணுப் பெயரடைகளை ஏற்று

ஒரு நான்

ஒரு நீ

போன்றெல்லாம் வருவதில்லை. ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்களில் இத்தகைய பண்பு நிலவுவதைக் காண முடிகிறது.

| | |
|---|---|
| ஒரு தான் | குறு 122.4 |
| ஒரு நின் பாணன் | குறு 127.4 |
| ஒரு தான் | புறம் 76.13 |
| ஒரு நீ | பத்து 6.29.4 |
| ஒரு யான் | குறு 6.4 |
| | புறம் 137.3 |

## 3.2. வினாப் பதிலிடு பெயர்கள்

மூவிடப் பெயர்களைப் போன்றே வினாப் பதிலிடு பெயர்களும் மொழியில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவனவாகும். வாக்கியத்தில் பெயர்த்தொடர்கள் வரும் இடங்களில் வந்து நின்று வினா எழுப்பும் நிலையில் இவை வினாப் பதிலிடு பெயர்கள் என அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

யார் வந்தார்?

என்னும் வாக்கியத்தில் எழுவாய்ப் பெயரின் இடத்தில் வினாப் பதிலிடு பெயர் வந்து வினாவினை எழுப்புகிறது. இதுபோன்றே,

யாருக்கு உரைப்பேன்?

என்ற வாக்கியத்தில் கு வேற்றுமைப் பெயரின் இடத்தில் வினாப் பதிலிடு பெயர் வரக் காணலாம்.

தொல்காப்பியம் யாவன், யாவள், யாவர், யாது, யா, யாவை, யார் ஆகிய ஏழு வினாப் பதிலிடு பெயர்களை மட்டுமே குறிப்பிடுகிறது.

யாவன் யாவள் யாவர் என்னும் (சொல்.சூத்.159)

யாதுயா யாவைஎன்னும் பெயரும் (சொல்.சூத்.164)

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும்
உரித்தே (சொல்.சூத்.207)

ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்களில் இவற்றுடன் என்ன, யாது, யாவது ஆகிய பதிலிடு பெயர்களும் காணப்படுகின்றன. தொல்காப்பியம் குறிப்பிடும் யாவன், யாவள், யாவர், யாவை, யா ஆகிய வினாப் பதிலிடு பெயர்களுள் யாவன் என்ற வினாப் பதிலிடு பெயர் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை. யாவிர், யாவள், யாவை ஆகியவையும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன. இவற்றின் மாற்று வடிவங்களான எவன், எவள், எவர், எது, எவை ஆகியவற்றில் 'எவள்' என்ற சொல்லும் 'எது' என்ற சொல்லும் மட்டுமே பழந்தமிழ் இலக்கியங்களில் ஒவ்வொரு இடத்தில் காணப்படுகின்றன.

### 3.2.1. யா-வகை வினாப்பதிலிடு பெயர்கள்

#### 3.2.1.1. யாவிர்

இப்பதிலிடு பெயர் ஒரு முன்னிலைப் பெயருக்குப்

பதிலாகவந்து நின்று வினா எழுப்புவது. இச்சொல் புறநானூறு (1), சிலப்பதிகாரம் (1) ஆகிய இரு நூல்களில் மட்டுமே வந்துள்ளது.

யாவி ராயினுங் கூழை தார்கொண்டு புறம் 88.1

........ யாவிரோவென முனியாதே சிலம்பு 24.1.4.

**3.2.1.2. யாவள்**

இப்பதிலிடு பெயர் ஒரு பெண்பால் பெயருக்குப் பதிலாகவந்து நின்று வினா எழுப்புவது. இச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகிறது.

நீநயந் துறையப் பட்டோள்

யாவ ளோ .................. ஐங். 370.4

**3.2.1.3. யாவர்**

இப்பதிலீடு பெயர் ஓர் உயர்திணைப் பெயருக்கு மாற்றாக வந்து நின்று வினா எழுப்புவது. தொல்காப்பியம் குறிப்பிடுவது போன்று ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்று பாலுக்கும் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களுக்கும் உரியது. இச்சொல் பழந்தமிழில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகிறது.

இவர்யாவ ரேமுற்றார் .......... கலி 147.12

இதன் மாற்று வடிவமான 'யார்' என்ற சொல்லே மிக அதிகமாக வந்துள்ளது. (பதி 5, ஐங் 6, அகம் 5, நற் 7, குறு 9, புறம் 22, பத்து 1, பரி 3, கலி 23, குறள் 10, சிலம்பு 11, மணி 15). இச்சொல் வாக்கியத்தில் முதல், இடை, இறுதி ஆகிய மூன்று இடங்களிலும் வரக் காணலாம்.

**வாக்கியத்தின் முதலில்**

யாரிவ ணெடுந் தகை வாழுமோரே பதி 71.27

**வாக்கியத்தின் இடையில்**

*..................... துடைப்பார்*
*யாரா குவர் .......................* குறு *82.3*

*யாரா கியரோ தோழி ...........* குறு *110.2*

**வாக்கியத்தின் இறுதியில்**

*நுங்கோ யாரென வினவின் ...........* பதி *20.1*

*சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ* அகம் *46.16*

'யார்' என்ற சொல் ஒரு உயர்திணைப் பெயருக்கு மாற்றாக வருவது. இந்த உயர்திணைப் பெயர் ஒரு வேற்றுமைப் பெயராகவோ, நிரப்பியப் பெயராகவோ, பெயர்ப் பயனிலை யாகவோ அமையலாம்.

**3.2.1.3.1. வேற்றுமைப்பெயர்**

இது எழுவாய் வேற்றுமை இடத்தில் மிக அரிதாகவே வரும். பழந்தமிழ் இலக்கியங்களில் ஒரு இடத்தில் மட்டுமே இத்தகைய எடுத்துக்காட்டினைக் காண முடிகின்றது.

*இனியா ருளரோ ...........* பதி *45.18*

**கு வேற்றுமை**

*யார்க்கு நொந் துரைக்கோ ...........* நற் *211.1*

*நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே* புறம் *213.16*

**3.2.1.3.2. நிரப்பியப் பெயர்**

*........... யாரே நீயெமக்கு* நற் *141.1*

*................. அவர் நமக்கு*
*யாரா கியரோ ...............* குறு *110.1-2*

**3.2.1.3.3. பெயர்ப் பயனிலை**

*நுங்கோ யாரென வினவின்* பதி *20.1*

இவர் யார் .................. நற் 6.6

ஒரு சில இடங்களில் 'யார்' என்ற சொல்லுடன் பால் அல்லது இடம் காட்டும் விகுதிகள் இணைந்து வருவதையும் காண்கிறோம்.

நினக்கியாம் யாரேம் ஆகுதும் ... கலி 82.18

........................ நின்றோய்
யாரையோ ........................ நற் 155.3-4

........................ இருந்தனிர்
யாரீரோ ........................... புறம் 141.5

பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே குறு 19.5

### 3.2.1.4. யாவது

பழந்தமிழ் நூல்களில் இச்சொல் குறைந்த எண்ணிக்கையிலேயே வந்துள்ளது(பதி 2, ஐங் 2, அகம் 3, நற் 3, புறம் 5, கலி 1, மணி 2). இது கலித்தொகையில் ஒரு இடத்தில் மட்டும் அஃறிணை ஒருமை குறித்து வந்துள்ளது. எஞ்சிய இடங்களில் ஒரு நிகழ்ச்சி நிகழ்தல் தகாது அல்லது நிகழ்தல் எங்ஙனம் என்ற பொருள்களில் வந்துள்ளது. இது வாக்கியத்தின் இறுதியில் மட்டுமே வந்துள்ளது.

**அஃறிணை ஒருமை**

காதலர் காதலங் காண்பாங் கொல்லோ
துறந்தவ ராண் டுறைகுவர் கொல்லோ
யாவது கனி 36.20-21

**தகாது என்ற பொருளில்**

.......தோன்றல் யாவது ............ பதி 80.15

... வினைவயிற் பிரிதல் யாவது ... அகம் 161.1

**எங்ஙனம் என்ற பொருளில்**

நின்மறந் துறைதல் யாவது......... அகம் 129.3

............. கண் படுதல் யாவது... அகம் 223.10

'யாது' என்ற சொல் 'யாவது' என்ற சொல்லின் மாற்று வடிவமாகும். இது பழந்தமிழ் இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகிறது (அகம் 5, நற் 7, குறு 1, புறம் 3, கலி 13, குறள் 18, சிலம்பு 12, மணி 15). வாக்கியத்தின் முதலில் மிகுதியாகவும், ஒரு சில இடங்களில் வாக்கியத்தின் இடையிலும், இறுதியிலும் இவ்வினாச் சொல் வரக் காண்கிறோம்.

**வாக்கியத்தின் முதலில்**

யாதோ மற்றும் மாநிறம் படர் ..... அகம் 48.13

யாதுசெய் வாங்கொல் தோழி ...... குறு 197.1

**வாக்கியத்தின் இடையில்**

............ கைம்மாறு
யாது செய்வாங்கொல் நாமே .... நற் 194.2

**வாக்கியத்தில் இறுதியில்**

............ சிறுகுடி யாது ............ நற் 213.6

.............. பேறியா து............... புறம் 154.6

இச்சொல் 'என்ன' என்ற பொருளில் மிகுதியாகவும், 'எது' என்ற பொருளில் ஒரு சில இடங்களிலும், 'ஏன்' என்ற பொருளில் ஒரே ஒரு இடத்திலும் வந்துள்ளது.

**என்ன என்ற பொருளில்**

யாதுசெய் வாங்கொல் தோழி ......அகம் 364.12

.............. யாது கொல் நிலையே நற் 319.11

**எது என்ற பொருளில்**

ஊர் யாது ............................. அகம் 315.2

யாது நும்மூர் ......................... சிலம்பு 11.32

**ஏன் என்ற பொருளில்**

*யாதிவன் வரவு ...................... சிலம்பு 15.162*

**3.2.1.5. யாவை**

'யாவை' என்ற சொல் ஒரு அஃறிணைப் பன்மைச் சொல்லின் இடத்தில் வந்து நிற்கும் வினாச்சொல். இது பழந்தமிழ் நூல்களில் இரண்டு இடங்களில் மணிமேகலையில் மட்டுமே வந்துள்ளது.

*யாவையீங் களிப்பன ............... மணி 14.48*

*................ நூற்பொருள் யாவைமணி 27.168*

**3.2.2. எ-வகை வினாப் பதிலிடு பெயர்கள்**

முன்னரே குறிப்பிட்டது போன்று என்ன,என், எவள், எது ஆகிய எ-வகை வினாப் பதிலிடு பெயர்களே பழந்தமிழில் காணப்படுகின்றன.

**3.2.2.1. என்ன/என்**

இச்சொல் ஓர் அஃறிணைப் பெயருக்கு மாற்றாக வந்து நிற்பது. என்ன, என் ஆகிய இரு சொற்களுள் 'என்' என்ற சொல்லே பழந்தமிழ் நூல்களில் அதிகமாகக் காணப்படுகிறது. 'என்ன' என்ற சொல் 25 இடங்களில் மட்டுமே காணப்படுகிறது. (பதி 0, ஐங் 1, அகம் 1, நற் 1, குறு 1, புறம் 0, பத்து 0, பரி 0, கலி 0, குறள் 3, சிலம்பு 18, மணி 0).

**என்**

*தானென் னிழந்ததிவ் வழுங்க லூரே நற் 36.7*

*என்னாந் தோழிநம்இன்னுயிர் நிலையே குறு 319.8*

*ஈங்கு நிற்றீர் என்னுற் றீர் மணி 6.15*

**என்ன**

*என்ன மரங்கொலவர் சார லவ்வே ஐங் 201.4*

நாராய ணாவென்னா நாவென்ன நாவே சிலம்பு 17.37.5

குறுந்தொகையில் ஒரு இடத்தில் 'என்ன' என்ற சொல்லுடன் ஆண்பால் ஒருமை விகுதி இணைந்து வரக் காண்கிறோம்.

அன்னா யிவனோர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத்து என்னன்கொல்லோ குறு 33.1-2

### 3.2.2.2. எவள்

இது ஒரு பெண் பால் பெயருக்கு மாற்றாக வந்து வினா எழுப்புவது. இது பழந்தமிழில் ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகிறது.

உள்ளழுத்தி யாளெவளோ............ பரி 6.91

### 3.2.2.3. ஏது/எது

இச்சொல் ஓர் அஃறிணைச் சொல்லுக்கு மாற்றாக வந்து நிற்பது. 'என்ன' என்ற சொல்லுக்கும் 'எது' சொல்லுக்கும் பயன்பாட்டில் வேற்றுமை உண்டு. ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களில் எந்த ஒன்று என்று வினா எழுப்பும் நிலையிலேயே 'எது' சொல் பயன்படுத்தப்படும். 'ஏது' என்ற சொல் பழந்தமிழில் ஒரு இடத்தில் மட்டுமே வந்துள்ளது.

இமைக்கண்ஏதா கின்றோ ............ குறு 285.6

## 3.3. வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள் (Indefinite Pronouns)

ஒருவரை அல்லது ஒன்றை 'யார்' என்று அல்லது 'எது' என்ற வரையறை செய்து குறிப்பிடாத பதிலிடு பெயர்கள் வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள் ஆகும். தமிழ் மொழியில் இப் பதிலிடு பெயர்கள் வினாப் பதிலிடு பெயர்களிலிருந்து தருவிக்கப்படுகின்றன. வினாப் பதிலிடு பெயர்களுடன் ஓ, ஆவது இணைத்து இவை உருவாக்கப்படுகின்றன. யாரோ, எதுவோ, என்னவோ, யாரையாவது, எதையாவது, என்னவாவது ஆகியவை வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள். இவை பழந்தமிழ்

*இலக்கியங்களில் காணப்படவில்லை.*

### 3.4. உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் (Universal Pronouns)

*எல்லோரையும் அல்லது எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கூறும் பதிலிடு பெயர்களே உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் எனப்படும். தமிழ் மொழியில் இப்பதிலிடு பெயர்கள் வினாப் பெயர்களுடன் 'உம்' இணைத்தோ, எண்ணுச்சொல்லான ஒன்று அல்லது ஒருவர் ஆகிய சொற்களுடன் 'உம்' இணைத்தோ தருவிக்கப்படுகின்றன. யாவரும்,யாரும், யாவதும், யாதும், எதுவும், எவனும், எவளும், எவரும், என்னவும், என்னதும், ஒன்றும், ஒருவரும் ஆகியவை உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் ஆகும். இவற்றுள் எதுவும், எவனும், எவரும், என்னவும் ஆகியவை பழந்தமிழ் நூல்களில் காணப்படவில்லை. ஒன்றும், ஒருவரும் ஆகியவை எதிர்மறையிலேயே வரும். இனிப் பழந்தமிழில் இவற்றின் நிலையைக் காணலாம்.*

#### *3.4.1. யாவரும்*

*பழந்தமிழ் இலக்கியங்களில் இச்சொல் உடன்பாடு, எதிர்மறை ஆகிய இரு வகை வாக்கியங்களிலும் வந்துள்ளது. இச்சொல் 14 இடங்களில் உடன்பாட்டு வாக்கியங்களிலும், 14 இடங்களில் எதிர்மறை வாக்கியங்களிலும் வரக்காண்கிறோம்.*

**உடன்பாடு**

*யாவரும் விழையும் பொலந்தொடிப்*
*புதல்வனை* *அகம் 16.5*

*யாது மூரே யாவரும் கேளிர்* *புறம் 192.1*

*மருந்திற் பட்டீராயின் யாவரும்*
*பெரும்பெயர் மன்னனிற்*
*பெருநவைப் பட்டீர்* *சிலம்பு 16.170-171*

**எதிர்மறை**

*........... யாவரும்*

வழங்குந ரின்மையின் வெளவுநர் மடிய அகம் 1.13-14

........... யாவரும்
அரவுமிழ் மணியிற் குறுகார் புறம் 294.7-8

### 3.4.2. யாரும்

பழந்தமிழ் இலக்கியங்களில் 'யாரும்' என்ற பதிலிடு பெயரும் 'யாவரும்' என்ற பதிலிடு பெயருக்கு இணையாகப் பயின்று வரக் காணலாம். இது உடன்பாட்டில் 23 இடங்களிலும் எதிர்மறையில் 16 இடங்களிலம் வரக் காண்கிறோம்.

**உடன்பாடு**

.................. நின் மனையோள்
யாரையும் புலக்கும் ................ ஐங் 87.3-4

யார்க்கும் மெளிதே தேரீ தல்லே புறம் 123.2

அன்னான்சொல் நம்புண்டல்
யார்க்குமிங் கரிதாயின் கலி 47.10

**எதிர்மறை**

பேரூர் துஞ்சும் யாரும் இல்லை நற் 132.1

யாரு மில்லைத் தானே கள்வன் குறு 25.1

தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள் குறள் 509

### 3.4.3. யாவதும்

இச்சொல் 'யாவரும்' என்ற சொல்லுக்கு இணையான அஃறிணைச் சொல். பழந்தமிழ் நூல்களில் இது பெருமளவில் எதிர்மறையிலேயே வரக் காண்கிறோம்.

**உடன்பாடு**

வண்மையு மாண்பும் வளனு மெச்சமுந்
தெய்வமும் யாவதுந்
தவமுடையோர்க்கென பதி 74.25-26

யாவதும் மருந்தும் தரும்கொல் சிலம்பு 5.232

**எதிர்மறை**

யாவது மறிகிலர் கழறுவோரே குறு 152.1

யாவது மிலையான் செயற்குரி யதுவே குறு 383.6

............................. யாவதும்
சாத்திடை வழங்கா ................. அகம் 291.4

### 3.4.4. யாதும்

இச்சொல் 'யாவதும்' என்ற சொல்லுக்கு இணையாகப் பயின்று வந்துள்ளது.உடன்பாட்டில் ஓர் இடத்தில் மட்டுமே காணப்படுகிறது. எதிர்மறையில் 13 இடங்களில் வந்துள்ளது.

**உடன்பாடு**

யாது மூரே யாவருங் கேளிர் புறம் 192.1

**எதிர்மறை**

ஒருநின் னல்லது பிறிது யாது மிலளே அகம் 170.3

நின்க ணல்லது பிறிதுயாது மிலளே நற் 355.11

என்திறம் யாதும் வினவல் ........... கலி 19.10

### 3.4.5. என்னதும்

இச்சொல்லும் எதிர்மறையிலேயே பெருமளவில் காணப்படுகிறது. உடன்பாட்டில் ஒரு இடத்தில் மட்டுமே வந்துள்ளது.

**உடன்பாடு**

.......................... என்னதூஉங்
கேட்டியோ .......................... அகம் 68.3

எதிர் மறை

என்னதும் பரியலோ விலம் ........ நற் 150.6

........................ என்னதூஉம்
பரியல் வேண்டா .................. புறம் 172.4

**3.4.6. ஒருவரும்**

முன்னரே குறிப்பிட்டபடி ஒருவரும், ஒன்றும் ஆகியவை எதிர்மறையிலேயே வரும்.

............................ அண்ணற்
கொருவரு மில்லை மாதோ செருவத்து புறம் 311.4-5

......................... ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டிருந்தருள்
செய்குவாய் சிலம்பு 12.3.4

**3.4.7. ஒன்றும்**

கைப்பொருள் யாதொன்று மிலனே புறம் 313.2

பிழையினை யென்னப் பிழையொன்றுங்
காணான் பரி 12.60

தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்து
ஒன்றும்
துன்னற்க தீவினைப் பால் குறள் 209

எதிர்மறை வாக்கியங்களில் உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் பயன்படுத்துகையில் எதிர்மறை உள்ளடக்குப் பதிலிடு பெயருடன் இணைந்து வாக்கியத்தின் பொருள் மாறுபட்டு விடுகிறது. எடுத்துக்காட்டாக,

யாவரும் வழங்குநர் இன்மையின் என்ற தொடர் வழங்குநர் யாவரும் இல்லை. ஒரு சிலரே என்ற பொருளைத் தருகிறது.

இதுபோன்றே,

யாவரும் பட்டிலர்

என்ற தொடரும் யாவரும் படவில்லை, ஒரு சிலரே பட்டனர் என்ற பொருளைத் தருகிறது. இதன் காரணமாகவே இத்தகைய எதிர்மறை வாக்கியங்களில் யாரும், ஒருவரும், ஒன்றும் ஆகிய சொற்களை உள்ளடக்குப் பதிலிடு பெயர்களாகப் பயன்படுத்தும் பண்பு தோன்றி வளர்ச்சி பெற்றது. இதனைக் கீழ்வரும் பட்டியல் நன்குக் காட்டும்.

**எதிர்மறை**

| | யாவரும் எதிர்மறை | யாரும் எதிர்மறை | ஒருவரும்/ ஒன்றும் எதிர்மறை |
|---|---|---|---|
| பதி | - | - | - |
| ஐங் | 1 | - | - |
| அகம் | 7 | - | - |
| நற் | 1 | 3 | - |
| குறு | 7 | 2 | - |
| புறம் | 3 | 2 | 2 |
| பத்து | 4 | - | - |
| பரி | 1 | 1 | 2 |
| கலி | 1 | 9 | 5 |
| குறள் | - | 7 | 6 |
| சிலம்பு | 6 | 3 | 4 |
| மணி | 7 | 2 | - |

## 3.5. பகிர்வுப் பதிலிடு பெயர்கள் (Distributive Pronouns)

பலர் சேர்ந்த ஒரு கூட்டத்தைத் தொகுத்துக் கூறாமல் தனித்தனியாகக் குறிப்பிடும் பதிலிடு பெயர்கள் பகிர்வுப் பதிலிடு பெயர்கள் ஆகும். தமிழ் மொழியில் ஒவ்வொருவனும், ஒவ்வொருத்தியும், ஒவ்வொருவரும், ஒவ்வொன்றும் ஆகியவை பகிர்வுப் பதிலிடு பெயர்கள் ஆகும். இவை பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை.

## 3.6. முழுமைப் பதிலிடு பெயர்கள் (Pronouns to Totally)

முழுமையைக் குறித்து வரும் பதிலிடு பெயரே முழுமைப் பதிலிடு பெயர் எனப்படும். தமிழ் மொழியில் எல்லாரும் எல்லாம், அனைவரும், அனைத்தும் ஆகிய சொற்கள் முழுமைப் பதிலிடு பெயர்களாகப் பயன்படுகின்றன. 'எல்லா' என்ற அடியுடன் ம், ர் ஒட்டுகள் இணைந்து எல்லாம், எல்லார் என்ற பதிலிடு பெயர்கள் அமைகின்றன. 'எல்லார்' என்ற சொல்லுடன் 'உம்' ஒட்டு இணைந்து எல்லாரும் என்ற உயர்திணைப் பெயர் அமைகின்றது. இது போன்றே 'அனை' என்ற அடியுடன் 'த்து+உம்' என்ற ஒட்டுகள் இணைந்து அனைத்தும் என்ற சொல்லும் 'வர்+உம்' என்ற ஒட்டுகள் இணைந்து அனைவரும் என்ற சொல்லும் பெறப்படுகின்றன. ஆறாம் வேற்றுமைப் பெயர்களில் 'எல்லார்' என்ற சொல்லுடன் 'உம்' இணையாமல் தலைமைப் பெயருடனே இணைகிறது.

எல்லார் வீடுகளிலும்

எல்லார் நெஞ்சிலும்

பிற பதிலிடு பெயர்களுக்கும், முழுமைப் பதிலிடு பெயர்களுக்கும் ஒரு முக்கியமான வேற்றுமை உண்டு. நான், நாம், அவன் போன்ற பதிலிடு பெயர்கள் முழுமையாக ஒரு பெயருக்குப் பதிலாக வரக்கூடியவை. எடுத்துக்காட்டாக, 'அவன்' என்ற சொல் ஒரு ஆண்பால் ஒருமைப்பெயருக்குப் பதிலாக வரக்கூடியது. ஆனால் முழுமைப் பதிலிடு பெயர்கள் பெயருக்குப் பதிலாக வருவதுடன் பெயரை அடுத்து அதனுடன் இணைந்தும்

வருபவை.

எல்லாரும் வாருங்கள்

மாணவர்கள் எல்லாரும் வாருங்கள்

பொதுவாக எல்லாரும், அனைவரும் ஆகிய இரு பதிலிடு பெயர்களும் உயர்திணையையும் எல்லாம், அனைத்தும் ஆகிய இரு பதிலிடு பெயர்களும் அஃறிணையையும் குறிப்பவை.

எல்லாரும்/அனைவரும் வந்தார்கள்

எல்லாம்/அனைத்தும் வந்தன

ஆயினும், இவற்றுள் எல்லாம் என்ற பதிலிடு பெயர் பெயர்களை அடுத்து வரும்போது திணைப் பகுப்பிற்கு உட்படாமல் உயர்திணை, அஃறிணை இரு சொற்களையும் குறித்து வருவதைக் காணலாம்.

அவர்கள் எல்லாம்/எல்லாரும் மாணவர்கள்

இப்பண்பு பழந்தமிழ் இலக்கியங்களிலேயே காணப் படுகிறது.

முழுமைப் பதிலிடு பெயர்கள் ஒருசில இடங்களில் பகிர்வுப் பதிலிடு பெயர்களைப் போன்று காணப்படுகின்றன.

இவர்கள் எல்லாரையும் நான் அறிவேன்

இவர்கள் ஒவ்வொருவரையும் நான் அறிவேன்

ஆயினும் இவற்றுள் வேறுபாடு உண்டு. எல்லாரும் என்பது முழுமையாகக் குறிப்பது. ஒவ்வொருவரும் என்பது தனித் தனியாக முழுமையைக் குறிப்பது. பல இடங்களில் இவை இரண்டும் துணைநிலை வழக்கிலேயே வருவதையும் காணலாம்.

எல்லாரும் வாருங்கள்

ஒவ்வொருவரும் வாருங்கள்

ஒவ்வொருவரும் ஒரு பாடம் நடத்தினார்கள்

எல்லாரும் ஒரு பாடம் நடத்தினார்கள்

'எல்லா' என்ற அடி பெயரடையாக அஃறிணை, உயர்திணைச் சொற்களுடன் இணைந்து வரக்கூடியது.

எல்லாப் பொருள்களும்

எல்லா மாணவர்களும்

எண்ணப்படு பெயர்கள் மட்டுமின்றி பால், தண்ணீர் போன்ற திரட்பெயர்களும் பொறுமை, கோபம் போன்ற பண்புப் பெயர்களும்கூட இப்பெயரடையை அடுத்து வரும். ஆனால் இத்தகைய பெயர்களில் இப்பெயரடை 'முழுதும்' என்ற பொருளிலேயே வரும்.

எல்லாப் பாலும் கெட்டுப் போயிற்று

எல்லாக் காற்றும் அங்கேதான் வீசுகிறது

எல்லாப் பொறுமையும் பறந்துவிட்டது

எல்லாம், எல்லாரும் ஆகிய இரு சொற்களும் பதிலிடு பெயர்களாக வருவது மட்டுமின்றி பெயர்களை அடுத்து வந்தும் முழுமையைக் காட்டும்.

மரங்கள் எல்லாம் வாடின

மாணவர்கள் எல்லாரும் வந்தார்கள்

முன்னரே குறிப்பிட்டபடி பெயர்களை அடுத்துவரும் இத்தகைய இடங்களில் மட்டும் 'எல்லாம்' என்ற சொல் உயர்திணையையும் குறித்து வரக் காணலாம்.

மாணவர்கள் எல்லாம் வந்தார்கள்

உயர்திணைப் பெயர்களை அடுத்து 'எல்லாம்' என்ற பதிலிடு பெயர் வரின் வேற்றுமை உருபுகள் பெயர்களோடு இணையும்.

மாணவர்களுக்கு எல்லாம்

மாணவர்களை எல்லாம்

உயர்திணைப் பெயர்களை அடுத்து 'எல்லாரும்' என்ற பதிலிடு பெயர் வரின் வேற்றுமை உருபுகள் பதிலிடு பெயருடன் இணையும்.

மாணவர்கள் எல்லாருக்கும்

மாணவர்கள் எல்லாரையும்

பொதுவாக, 'எல்லா' என்ற அடி பெயர்களுக்கு முன்னும், எல்லாம், எல்லாரும் என்ற பதிலிடு பெயர்கள் பெயர்களுக்குப் பின்னும் இணைந்து முழுமைப் பொருளைத் தந்து நிற்பவை. ஆகவே,

எல்லா மாணவர்களும்

எல்லா நூல்களும்

போன்ற தொடர்களை

மாணவர்கள் எல்லாம்/எல்லாரும்

நூல்கள் எல்லாம்

என எளிதில் மாற்ற இயலும். ஆயினும், கீழ்வரும் அமைப்புகளில் இவ்வகையான மாற்றம் செய்ய முடிவதில்லை.

*1)* பெயரெச்சங்களை அடுத்து வரும் பதிலிடு பெயர்களை 'எல்லா' என்ற பெயரடையாக மாற்ற இயலாது. எடுத்துக்காட்டாக,

இங்கு வந்திருக்கின்ற எல்லாரும் என்பதை

இங்கு எல்லா வந்திருக்கிறவர்கள்

என்று மாற்ற முடியாது. இங்கு எல்லாம், எல்லாரும் ஆகிய இரு பதிலிடு பெயர்களும் ஒரு மாறுபட்ட பண்பைக் கொண்டுள்ளன. பெயரெச்சங்களை அடுத்து எல்லாம் என்ற சொல் எழுவாய் தவிர்ந்த பிற வேற்றுமை உருபுகளையே எடுத்து வரும். எடுத்துக்காட்டாக,

இங்கு வந்த எல்லாம்

இங்கு வந்த எல்லாவற்றையும்

பெயரெச்சங்களை அடுத்து வரும் பதிலிடு பெயர்களைப் பெயரடையாக மாற்ற முடியாவிட்டாலும் பெயரெச்சத் தொடர்களை அடுத்து வரும் பதிலிடு பெயர்களைப் பெயரடையாக மாற்ற இயலும்.

இங்கு படித்த மாணவர்கள் எல்லாம்

இங்கு படித்த எல்லா மாணவர்களும்

ஆயினும் பெயரெச்ச அடித் தொடர்களை அடுத்து வரும் பதிலிடு பெயர்களை பெயரடையாக மாற்ற முடிவதில்லை.

விளையாடு சிறார்கள் எல்லாம் *கலி 23.87*

* எல்லா விளையாடு சிறார்களும்

*2)* வினையாலணையும் பெயர்களை அடுத்து வரும் 'எல்லாம்' என்ற பதிலிடு பெயரினையும் 'எல்லா' என்ற பெயரடையாக மாற்ற இயலாது.

இதைப் படித்தவர்கள் எல்லாம்

* இதை எல்லா படித்தவர்கள்

ஆயினும் குறிப்பு வினையாலணையும் பெயர்களை அடுத்து வரும் பதிலிடு பெயரை பெயரடையாக மாற்ற முடியும்.

நல்லவை எல்லாம்

எல்லா நல்லவையும்

*3)* தன்மை, முன்னிலை, படர்க்கை மூவிடப் பெயர்களை அடுத்துவரும் பதிலிடு பெயர்களையும் பெயரடையாக மாற்ற இயலாது.

நாம் எல்லாம்

* எல்லா நாம்
  நீங்கள் எல்லாம்

* எல்லா நீங்கள்
  அவர்கள் எல்லாம்

* எல்லா அவர்கள்

4) சுட்டு, அளவு, வினாப் பதிலிடு பெயர்களை அடுத்து இவை வரும் போதும் பெயரடையாக மாற்ற இயலாது.

அங்கெல்லாம்/இங்கெல்லாம்/எங்கெல்லாம்

இவ்வளவெல்லாம்/அவ்வளவெல்லாம்/எவ்வளவெல்லாம்

யாரெல்லாம்/எதெல்லாம்/என்னவெல்லாம்/எப்படியெல்லாம்

எனப் பதிலிடு பெயர்களை அடுத்து 'எல்லாம்' என்ற பதிலிடு பெயர் வரக்கூடும். ஆனால் 'எல்லா' என்ற பெயரடை வர இயலாது.

5) சிறப்புப் பெயர்+பொதுப்பெயர் என்ற அமைப்பு கொண்ட ஆறாம் வேற்றுமைத் தொடர்களிலும் 'எல்லாம்' என்ற பதிலிடு பெயர் மட்டுமே வரும்.

மதுரை மக்கள் எல்லாரும்

'எல்லா மதுரை மக்களும்' என இதனை மாற்ற முடியாது. சிறப்புப் பெயர்கள் ஒருமை குறிப்பன என்பதே இதற்குக் காரணம்.

6) 'எல்லாம்' என்ற பதிலிடு பெயர் பொதுவாக பல ஒருமைகளின் தொகுப்பைக் குறித்து வந்தாலும் ஒன்றின் முழுமையைக் குறித்தும் வரும். எடுத்துக்காட்டாக,

இரவெல்லாம் தூங்கவில்லை

உடம்பெல்லாம் மண்

வழியெல்லாம் முள்

ஆகிய வாக்கியங்களில் ஒன்றின் முழுமையையே இது குறிக்கிறது. பன்மைச் சொற்களுடன் மட்டுமே வரக்கூடிய இப்பதிலிடு பெயர் இப்பொருளில் ஒருமைச் சொற்களுடன் வரும். இத்தகைய வாக்கியங்களில் 'எல்லா' என்றபெயரடை வருவதில்லை.

* எல்லா இரவும் தூங்கவில்லை
* எல்லா உடம்பும் மண்
* எல்லா வழியும் முள்

7) கூட்டுத் தொடர்களில் தொகுப்புச் சொல்லாகவும் இப்பதிலிடு பெயர் வரும்.

புத்தகம், பென்சில், எழுதுபலகை எல்லாம் இங்கு கிடைக்கும்.

சமைப்பது, படிப்பது, உறங்குவது ، ல்லாம் இந்த அறையில் தான்;

இத்தகைய வாக்கியங்களிலும் இதனைப் பெயரடையாக மாற்ற இயலாது.

8) ஒருமைச் சொல்லை அடுத்தும் ஒரு சில அமைப்புகளில் இப் பதிலிடு பெயர் வரக் காணலாம்.

உனக்கெல்லாம் வேலை கிடைக்காது

எனக்கெல்லாம் இது சரிப்படாது

இத்தகைய வாக்கியங்களை,

உன்னைப் போன்றவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்காது

என்னைப் போன்றவர்களுக்கெல்லாம் இது சரிப்படாது

என்ற கருத்துள்ள வாக்கியங்களாக அமைத்து ஒருமையுடன் 'எல்லாம்' என்ற பதிலிடு பெயர் இணைவதின் முரண்பாட்டை விளக்க முடியும். இவற்றில் 'எல்லா' என்ற பெயரடை வர முடியாது என்பது தெளிவு.

*9)* ஒரு சில மரபுத் தொடர்களிலும் 'எல்லாம்' என்ற பதிலிடு பெயர் வரக் காணலாம். இவற்றில் இதன் பொருளை விளக்குவது கடினம்.

சில நிமிடங்களுக்கொல்லாம் கண்கள் திறந்தன.

காலமெல்லாம் ஆராய்ச்சி செய்த பின்னரும் சிலவற்றிற்கு விடை காண முடியவில்லை.

படிப்பு எல்லாம் எப்படி இருக்கிறது?

*10)* ஒரு சில பெயரெச்சத் தொடர்களிலும் எல்லாம் என்ற பதிலிடு பெயர் முழுமையைக் காட்டுவதில்லை.

விசித்திரமான எண்ணங்கள் எல்லாம் உறித்தன.

ஊகிக்க முடியாத திசைகளில் எல்லாம் பேச்சு சென்றது

இவற்றை,

எல்லா விசித்திரமான எண்ணங்களும் உதித்தன என்றோ,

எல்லா ஊகிக்க முடியாத திசைகளிலும் பேச்சு சென்றது. என்றோ கூற இயலாது. இதற்குக் காரணம் காண இயலவில்லை.

இனிப் பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் இப்பதிலிடு பெயர் குறித்து வரைந்துள்ள இலக்கணத்தையும், பழந்தமிழ் இலக்கியங்களில் இதன் நிலையையும் காணலாம்.

தொல்காப்பியர் இப்பதிலிடு பெயரைப் பெயர் நிலைக்கிளவி என்று குறிப்பிட்டுப் பெயரியலில் நான்கு சூத்திரங்களில் *(தொல்.சொல். சூத். 161, 171, 183, 184)* இதற்கு இலக்கணம் வரைந்துள்ளார். பெயர்நிலைக்கிளவி என்ற சொல்லை நச்சினார்க்கினியர் பெயராகிய நிலைமையை உடைய

சொல் என்று விளக்குகிறார்.

எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும் (சூத்.161)

எல்லா நீயிர் நீயெனக் கிளந்து (சூத்.171)

எல்லாம் என்னும் பெயர்நிலைக்கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே (சூத்.183)

தன்னுள் உறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை (சூத்.184)

எல்லாரும், எல்லீரும் என்ற சொற்கள் உயர்திணையைக் குறிக்கும் என்று குறிப்பிடும் தொல்காப்பியர் 'எல்லாம்' என்னும் சொல் ''பல்வழி நுதலிய நிலைத்து ஆகும்'' அதாவது பல்வேறு பொருள்களைச் சுட்டி நிற்கும் என்று குறிப்பிடுகிறார். ஆயினும், அடுத்து உயர்திணையில் ''தன்னுள் உறுத்த பன்மைக் கல்வது ஆக்கம் இல்லை'' என்று இச்சொல்லுக்கு ஒரு வரையறை செய்கிறார். பழந்தமிழ் நூல்களில் இது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் பன்மையில் வந்துள்ளது. ஆகவே, உரையாசிரியர்கள் ''ஆக்கம் இல்லை'' என்ற தொடரை பெரும்பான்மை வராது, சிறுபான்மை வரும் என்று விளக்குகிறார்கள். ஆயினும், பழந்தமிழ் இலக்கியங்களில் இதற்கு முரணான நிலையே காணப்படுகிறது. இந்நூல்களில் இச்சொல் படர்க்கைப் பன்மையிலேயே பெரும்பான்மையும் வந்துள்ளது.

தொல்காப்பியத்தில் 'எல்லாம்' என்ற சொல் ஒரு இடத்தில் மட்டுமே உயர்திணைப் பன்மையைச் சுட்டுகிறது (ஏனோர்க்கு எல்லாம் தொல் 300.1). பிற இடங்களில் அஃறிணைப் பன்மையை மட்டுமே குறித்து வந்துள்ளது.

இனிப் பழந்தமிழ் நூல்களான பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் இதன் நிலையைக் காணலாம்.

**எல்லா**

பொதுவாக 'எல்லாம்' என்ற பதிலிடு பெயர் 'எல்லா' என்ற பெயரடையாக பெயருக்கு முன்னால் இணையக்கூடியது.

மாணவர்கள் எல்லாம்

எல்லா மாணவர்களும்

ஆனால் இப்பெயரடை பழந்தமிழ் நூல்களில் மிக மிக அரிதாகவே அதிலும் பின் பழந்தமிழ் நூல்களான கலித்தொகை (1), குறள் (8), மணிமேகலை (4) ஆகியவற்றில் மட்டுமே காணப்படுகிறது.

| | |
|---|---|
| எல்லாக்கதிரும் | கலி 145.27 |
| எல்லா உயிர்க்கும் | குறள் 361 |
| எல்லாப் பொருளும் | மணி 27.205 |

**எல்லாம்**

பழந்தமிழ் நூல்களில் இச்சொல்லே மிகப் பெரும்பான்மையான இடங்களில் வந்துள்ளது. பல்வேறு பொருள்களையும் உணர்த்தி வந்துள்ளது. ஆயினும் ஐங்குறுநூற்றில் ஒரு இடத்தில் கூட இச்சொல் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**1. அஃறிணைப் பன்மை**

பழந்தமிழ் நூல்களில் அஃறிணைப் பதிலிடு பெயராக இது 117 இடங்களில் வந்துள்ளது. (பதி 0, ஐங் 0, அகம் 4, நற் 4, குறு 3, புறம் 10, பத்து 3, பரி 4, கலி 12, குறள் 34, சிலம்பு 14, மணி 29).

| | |
|---|---|
| பழமொழி எல்லாம் | அகம் 66.5 |
| கலம் எல்லாம் | நற் 93.3 |

**2. உயர்திணைப் பன்மை**

பழந்தமிழ் நூல்களில் உயர்திணைப் பன்மைப் பெயராக

இது 42 இடங்களில் வந்துள்ளது ( பதி 0, ஐங் 0, அகம் 1, நற் 0, குறு 5, புறம் 6, பத்து 2, பரி 0, கலி 5, குறள் 5, சிலம்பு 10, மணி 12)

| | |
|---|---|
| உள்ளோர்க்கெல்லாம் | அகம் 258.13 |
| பாணர் எல்லாம் | குறு 127.5 |

பழந்தமிழில் இரு இடங்களில் இப்பதிலிடு பெயர் தன்மைப் பன்மையையும் இரு இடங்களில் முன்னிலைப் பன்மையையும் சுட்டி நிற்கக் காண்கிறோம்.

**தன்மைப் பன்மை**

| | |
|---|---|
| எல்லாம் பாடுகம் | புறம் 32.5 |
| எல்லாம் நாம் | சிலம்பு 17.28.5 |

**முன்னிலைப் பன்மை**

| | |
|---|---|
| கண்டவிர் எல்லாம் | கலி 140.1 |
| ஊடினீர் எல்லாம் | சிலம்பு 8.வெ.2.1 |

**3. பெயரெச்சத் தொடர்கள் + எல்லாம்**

பழந்தமிழில் பெயரெச்சத் தொடர்களை அடுத்து இப் பதிலிடு பெயர் 21 இடங்களில் மட்டுமே வந்துள்ளது. (பதி 0, ஐங் 0, அகம் 2, நற் 0, குறு 0, புறம் 1, பத்து 0, பரி 0, கலி 1, குறள் 6, சிலம்பு 5, மணி 6).

| | |
|---|---|
| உவந்த உவகை எல்லாம் | அகம் 42.11 |
| நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம் | புறம் 126.10 |

ஐந்து இடங்களில் பெயரெச்சங்களை அடுத்து இப்பதிலிடு பெயர் வரக் காண்கிறோம்.

| | |
|---|---|
| இயன்ற எல்லாம் | நற் க.வா.5 |
| சூடிய எல்லாம் | குறு 21.5 |

### 4. ஒன்றின் முழுமை குறித்தல்

ஒன்றின் முழுமையைக் குறிக்கும் பொருளில் இப்பதிலிடு பெயர் பழந்தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் வந்துள்ளது ( பதி 0, ஐங் 0, அகம் 2, நற் 0, குறு 1, புறம் 5, பத்து 1, பரி 3, கலி 5, குறள் 7, சிலம்பு 5, மணி 10).

நிலவரை எல்லாம் — அகம் 273.16

ஆயம் எல்லாம் — குறு 311.7

### 5. தொகுப்புச் சொல்

பல ஒருமைப் பெயர்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கூட்டிக் கூறும் கூட்டுத் தொடர்களில் தொகுப்புச் சொல்லாகவும் ஒரு சில இடங்களில் இப்பதிலிடு பெயர் வரக் காண்கிறோம் (பதி 1, ஐங் 0, அகம் 0 , நற் 2, குறு 0, புறம் 2, பத்து 0, பரி 3, கலி 1, குறள் 1, சிலம்பு 2, மணி 1)

செம்மையும் வளனும், வென்றியும்
எல்லாம் எண்ணி — பதி 32.8

கோதையும் எல்லாம் ஊதை
வெண்மணலே — நற் 278.9

மேலே கண்ட அமைப்புகளுடன் ஒரு சில விளக்க இயலாத அமைப்புகளும் பழந்தமிழில் காணப்படுகின்றன.

பண்டு எல்லாம் — பரி 6.63

தீம்பால் பெருகும் அளவெல்லாம்
நீட்டித்த காரணம் என் — கலி 83.5

பொய்யெல்லாம் ஏற்றி — கலி 95.27

சொல்லியவாறு எல்லாம் — கலி 111.20

பாடி வந்ததெல்லாம் ஆரம் முகக்குவம் என — புறம் 368.16

உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் — குறள் 294

### 3.6.2. எல்லார்

உயர்திணைப் பதிலிடு பெயரான இச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் மிகச் சிறிய எண்ணிக்கையிலேயே வந்துள்ளது. (பதி 1, ஐங் 0, அகம் 0, நற் 0, குறு 1, புறம் 5, பத்து 0, பரி 0, கலி 6, குறள் 6, சிலம்பு 1, மணி 0).

| | |
|---|---|
| எல்லாருள்ளும் | பதி 38-2 |
| எல்லாரும் அறிய | குறு 72.2 |
| எல்லார் மாவும் | புறம் 273.2 |
| கடவுளர் எல்லார்க்கும் | கலி 93.35 |
| பெண் இயலார் எல்லாரும் | குறள் 1311 |
| மதுரையார் எல்லாரும் | சிலம்பு 19.16 |

### 3.6.3. எல்லீர்

முன்னிலை உயர்திணைப் பதிலிடு பெயரான இச்சொல் கலித்தொகை (4), சிலப்பதிகாரம் (3) ஆகிய இரு இலக்கியங்களில் மட்டும் காணப்படுகிறது.

| | |
|---|---|
| எல்லீரும் கேட்டீமின் | கலி 135.11 |
| தோழிமீர் எல்லீரும் | சிலம்பு 29:10.4 |

### 3.6.4. அனைத்தும்

இச்சொல் அகநானூறு (1), பத்துப்பாட்டு (8), பரிபாடல் (3), சிலப்பதிகாரம் (1), மணிமேகலை (1) ஆகிய நான்கு இலக்கியங்களில் மட்டுமே வந்துள்ளது.

| | |
|---|---|
| நோக்கமும், மாலையும், அற்சிரமும் அனைத்தும் | அகம் 378.16 |
| விழுக்கல மனைத்தும் | பத்து 6.695 |
| அனைத்து நீ | பரி 3.68 |

பண்ணும், பாணியும் இவை அனைத்தும் — சிலம்பு 10 கட்டுரை

எவ்வுயிரனைத்தும் — மணி 21.94

### 3.6.5. அனைவர்

இச்சொல் குறளில் ஒரு இடத்திலும் மணிமேகலையில் ஒரு இடத்திலும் வந்துள்ளது.

அனைவரையும் ஆராய்வது ஒற்று — குறள் 584.2

வேந்தர் அனைவரை வென்று — மணி 26.87

## 3.7. தான், தாம் பதிலிடு பெயர்கள்

தமிழ் மொழி அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை ஆகிய படர்க்கைப் பதிலிடு பெயர்களுடன் தான், தாம் ஆகிய இரு படர்க்கைப் பதிலிடு பெயர்களையும் கொண்டுள்ளது.

எடுத்துக்காட்டாக,

அவன், தான் மறுநாள் வருவதாகச் சொன்னான் என்ற வாக்கியத்தில் தான் அவனைச் சுட்டி நிற்கின்றது.

* நீ தான் மறுநாள் வருவதாகச் சொன்னாய்
* நான் தான் மறுநாள் வருவதாகச் சொன்னேன்

என்றெல்லாம் தான் தன்மை, முன்னிலைப் பதிலிடு பெயர்களைச் சுட்டி வர இயலாது.

தமிழ்மொழியில் தான் என்ற பதிலிடு பெயர் நான்கு வகைச் செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

1. படர்க்கைப் பெயரை அழுத்தம் கொடுத்துக் கூறுவதற்கு இப்பதிலிடு பெயர் பயன்படுகிறது.

கண்ணன்தானே வயலை உழுது முடித்தான்

என்ற வாக்கியத்தில் கண்ணன் ஒருவனாகவே வயலை உழுது முடித்தான் என்ற அழுத்தத்தைதான் பதிலிடு பெயர் தருகிறது.

2. தலைமை வாக்கியத்தில் வரும் பெயர் துணை நிலை வாக்கியத்திலும் வரும் நிலையில் பெயருக்குப் பதில் 'தான்' இட்டு கூறப்படுகிறது.

கண்ணன் தான் சாப்பிட்டுவிட்டதாகக் கூறினான்.

3. படர்க்கைப் பெயர்களும் பதிலிடு பெயர்களும் வரும் தற்சுட்டு வாக்கியங்களில் தற்சுட்டுப் பதிலிடு பெயராகவும் 'தான்' பயன்படுகிறது.

அவன் தன்னை நொந்து கொண்டான்.

4. இரு தனித்தனிவாக்கியங்களை 'உம்' இடைச்சொல் கொண்டு இணைக்கையில் இரண்டாவது வாக்கிய எழுவாய் 'தான்' பதிலிடு பெயர் கொண்டு வரக்காணலாம்.

ராமன் வனத்துக்குச் சென்றான்.

சீதை தானும் அவனோடு வனத்துக்குச் சென்றாள்.

தன்மை, முன்னிலைப் பதிலிடு பெயர்கள் வரும் வாக்கியங்களில் அவற்றைக் குறிக்க ஒரே வகையான பதிலிடு பெயர்களே வர, படர்க்கைப் பதிலிடு பெயர்களைக் குறிக்க இருவகையான பதிலிடு பெயர்களைத் தமிழ்மொழி கொண்டுள்ளது.

நான் என்னுடைய நண்பனைப் பார்த்தேன்.

அவன் [அவனுடைய / தன்னுடைய] நண்பனைப் பார்த்தான்

இவ்வாறு அவன், தான் ஆகிய இரு சொற்களும் படர்க்கைப் பெயர்களைச் சுட்டுவனவாக வரினும், 'தான்' பதிலிடு பெயர் படர்க்கைப் பெயர்களும், படர்க்கைப் பதிலிடு பெயர்களும் எழுவாயாக வரும்போது மட்டுமே அவற்றைக்

குறிக்கும் இயல்புடையது.

*அவனைத் தன்னுடைய நண்பன் பார்த்தான்*

*அவனோடு தன் நண்பன் சென்றான்*

என்றெல்லாம் கூற இயலாது. இத்தகைய வாக்கியங்களில் அவன் என்ற பதிலிடு பெயரே வரக் காண்கிறோம்.

*அவனை அவனுடைய நண்பன் பார்த்தான்*

*அவனோடு அவனுடைய நண்பன் சென்றான்*

'தான்' பதிலிடு பெயர் துணைநிலை வாக்கியத்தில் இருந்து அது குறிக்கும் பெயர் தலைமை வாக்கியத்தில் இருப்பினும் அதனைச் சுட்டி வரக்கூடியது. எடுத்துக்காட்டாக,

*கண்ணன் தன் தங்கையைப் படிக்கச் செய்தான்* என்ற வாக்கியம்,

*1. கண்ணன் செய்தான்*

*2. கண்ணனின் தங்கை படித்தாள்*

என்ற இரு வாக்கியங்களைக் கொண்டது. துணைநிலை வாக்கியத்தில் உள்ள பெயரின் இடத்தில் 'தன்' பதிலிடு பெயர் இடம் பெறுகிறது. இப்பதிலிடு பெயர்சுட்டும் பெயர் எழுவாயாக இருத்தல் மட்டுமே இன்றியமையாதது.

கீழ் வரும் வாக்கியம்,

*கமலா தன் தங்கையைக் கண்டித்ததைக் கண்ணன் அறிந்தான்;*

இரு பொருள் தருவது.

*1. அ. கண்ணன் அறிந்தான்*
*ஆ. கமலா கமலாவின் தங்கையைக் கண்டித்தாள்*

*2. அ. கண்ணன் அறிந்தான்*
*ஆ. கமலா கண்ணனின் தங்கையைக் கண்டித்தாள்*

முதல் வாக்கியத்தில் இப்பதிலிடு பெயர் குறிக்கும் பெயர் அதே துணைநிலை வாக்கிய எழுவாயாகவும், இரண்டாவது வாக்கியத்தில் இப்பெயர் தலைமை வாக்கிய எழுவாயாகவும் இருக்கக் காணலாம்.

ஆயினும் தலைமை வாக்கியத்தில் தன்மை, முன்னிலை எழுவாய்கள் வரின் 'தான்' பதிலிடு பெயர் துணைநிலைவாக்கிய எழுவாய் படர்க்கையாக இருப்பினும் சுட்டுவதில்லை.

நான் தன் தங்கையைக் கண்டித்ததைக் கண்ணன் அறிந்தான்.

என்று கூற இயலாது. மேலும் தற்சுட்டாக்க வாக்கியங்களில் 'தான்' பதிலிடு பெயர் தற்சுட்டாக்க வாக்கியத்தின் எழுவாயை மட்டுமே சுட்டக்கூடியதாகக் கட்டுப்படுத்தப்படுவதையும் காண்கிறோம்.

கண்ணன் தன்னை சிறையில் அடைத்துக் கொண்டதை சீதா விரும்பவில்லை.

இங்கு 'தன்னை' என்பது கண்ணனை மட்டுமே குறிக்கக் கூடியது.

இப்பதிலிடு பெயர் எழுவாயை மட்டுமே குறிக்கக் கூடியதாக இருப்பினும் உணர்வு வாக்கியங்களில் 'ஐ' வேற்றுமைப் பெயர்களையும் சுட்டக்கூடியது.

தன் தந்தை இறந்த செய்தி அவனை வருத்தியது.

இதுபோன்றே கு வேற்றுமை எழுவாய்களையும் இது சுட்டக்கூடியது.

அவனுக்கு தன் தங்கையைப் பிடிக்கும்

அவனுக்கு தன் தாய்மொழி தெரியாது

அவனுக்கு தன் தங்கை மீது கொள்ளை அன்பு

இனிப் பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை

ஆகியவற்றில் இப்பதிலிடு பெயரின் தன்மையைக் காணலாம்.

### 3.7.1. தற்சுட்டாக்கம்

பழந்தமிழ் நூல்களில் பதினான்கு இடங்களில் இப்பதிலிடு பெயர் தற்சுட்டுப் பதிலிடு பெயராக வந்துள்ளது. (ஐங் 68-4, புறம் 2 6-7, 274-4, குறள் 56, 209, 237, 250, 305, 439, 474, 878, 883, 974, 1009). பழந்தமிழில் தற்சுட்டாக்கத் துணை வினையான 'கொள்' காணப்படாத நிலையில் இதுவே தற்சுட்டாக்கத்தைக் குறிக்கிறது எனலாம்.

*கடுமான் றோன்ற னெடுமா னஞ்சி*
*தன்னறி யலன்கொல் ............... புறம் 206-6-7*

*தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண் குறள் 56*

*தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம் குறள் 305*

ஐங்குறு நூற்றில் ஒரு இடத்தில் இத் தற்சுட்டுப் பதிலிடு பெயர் தன்மைப் பதிலிடு பெயரைச் சுட்டி நிற்பதைக் காண்கிறோம்.

*பேணா ளோநின் பெண்டே*
*யான்ற னடக்கவுந் தாடங் கலளே ஐங் 68.3.4*

பழந்தமிழ் நூல்களில் தற்சுட்டாக்கம் மிக அரிதாகக் காணப்படுகின்ற நிலையில் பழந்தமிழில் இத் தற்சுட்டுப் பதிலிடு பெயரின் உண்மையான நிலையை அறுதியிடுவது கடினமாக உள்ளது.

### 3.7.2. பெயருக்கு அழுத்தம்

*.................................. தானே*
*தனக்கமைந் தன்றிவள் மாமை கவினே ஐங் 103.3.4*

*யாரு மில்லைத் தானே கள்வன் குறு 25.1*

இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித் புறம் 363.1.3

தாமே யாண்ட வேமங் காவலர்
நின்முகந் தான்பெறி னல்லது கொன்னே
மருந்து பிறிதியாது மில்லேல் திருந்திழாய் கலி 60.20.21

சாவதுதான் வாழ்வென்று
தானம் பல செய்து சிலம்பு 29.6.3

மாதவ ருறைவிட மொரீஇ மணி மேகலை
தானே தமியளிங் கெய்திய துரையென மணி 4.103-104

### 3.7.3. அழுத்தம் இன்றி

பாய்பரி நெடுந்தேர் கொண்கனொடு
தான்வந் தன்றென் மாமைக்கவினே ஐங் 134.2.3

...................... செவ்வின வேனில்
வந்தன் றம்ம தானே அகம் 277.18.19

தானென் னிழந்ததிவ் வழுங்க லூரே நற் 36.8

தான்வந் தன்றே தளிதரு தண்கார் குறு 65.3

மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே புறம் 165.1.2

அளியன் றானே முதுவா யிரவலன் பத்து 1.284

........... வயங்குநீர்ச் சோர்ப்பனை
..........................................
..........................................
தானூக் கினனவ் வூசலை வந்தே கலி 131.43-46

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான் குறள் 206

ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத்தான்றன்

அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
சிலம்பு 20.54-55

மாலிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்
தாங்கிய தொருநாட் டானாங் கிழிந்தனன் மணி 14.81-82

### 3.7.4. துணை நிலை வாக்கிய எழுவாய்

முன்தான் கண்ட ஞான்றினும்
பின்பெரி தளிக்குந்தன் பண்பினானே அகம் 178,21-22

சேயிறா எறிந்த சிறுவெண் காக்கை
.........................................
தான்வீழ் பெடைக்குப் பயிரிடு உச்சுரக்கும் நற்.31.2-4

தான்துழந் தட்ட தீம்புளிப்பாகர்
இனிதெனக் கணவனுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்றொண்ணுதல் முகனே
குறு 167, 4-6

முணங்குநிமிர் வயமான் முழுவலி யொருத்தல்
.........................................
தான்வேண்டு மருங்கின் வேட்டெழுத் தாங்கு
புறம் 52.2-4

வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி பத்து 9.5-6

................................ நீரவன்
தாழ்வுழி யுய்யாது தான்வேண்டு மாறுய்ப்ப பரி.11.109-110

முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக்கல்லான் பெயருமன் பன்னாளும்
கலி.37.4-5

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று குறள் 82

மாதர்தா னுற்ற வான்றுயர் செப்ப சிலம்பு 15.65

வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
தங்கா வேட்கையிற் றானுஞ் செல்வுழி — மணி 16.11-12

### 3.7.5. பரஸ்பரப் பதிலிடு பெயர்

தன்மைப் பதிலிடு பெயரான 'தாம்' பரஸ்பரப் பதிலிடு பெயராக ஏழு இடங்களில் (புறம் 1, கலி.3, மணி.3) வரக் காண்கிறோம்.

இருசுடர் தம்முள் நோக்கி யொருசுடர்
புன்கண் மாலை மலைமறைத் தாங்கு — புறம் 65.7-8

ஒரோஒகை தம்முள் தழீஇ யொரோ ஒகை
ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும் — கலி 18.9-10

விலங்குந் தம்முள் வெரூஉம்பகை நீக்கி — மணி 10.63

### 3.7.6. எழுவாய் அல்லாதபெயரைச் சுட்டுதல்

இப்பதிலிடு பெயர் எழுவாய்ப்பெயரை மட்டுமே சுட்டும் இயல்புடையது என முன்னரே கண்டோம். எனினும் பழந்தமிழ் இலக்கியங்களில் இருபது இடங்களில் இப்பதிலிடு பெயர் பிற வேற்றுமைப் பெயர்களைச் சுட்டிவரக் காண்கிறோம்.

*(அகம்.314-13, புறம், 367-5, 262-6, 387-14, கலி.147.46, பத்து. 3.127, குறள் 63, 68, 105, 190, 293, 305, 319, 603, 608, 630, 756, சிலம்பு 15-126, 29-4-1, மணி 23-17)*

இந்நிலை வாராராயின் தந்நிலை
எவன்கொல் ......................... — அகம் 314 13-14

நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினுந் தம்மொடு செல்லா — புறம் 367.1-2

மிகப்பொலியர்தன் சேவடியத்தையென்று — புறம் 387.14

நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி

முன்னாட் சென்றனமாக ........... பத்து3.126-129

தன்னெஞ் சொருவற் கினைவித்தல் யாவர்க்கு
மன்னவோ காம நின்னம்பு கலி 147,46-47

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும் குறள் 608

உறுபொருளும் உல்குபொருளும் தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன்பொருள் குறள் 756

மாதரி கேளிம் மடந்தைதன் கணவன்
தாதையைக்கேட்கிற் றன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு
கடிமனைப் படுத்துவர் சிலம்பு 15.125-129

தற்பய்ந்தாட் கில்லைத் தன்னைப் புறங்காத்த
எற்பயந் தாட்கு மெனக்குமோர் சொல்லில்லை
சிலம்பு 29.4.12

தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன்
றென்னெனப் படுமோ நின்மகன் மடிந்தது மணி 23.17-18

### 3.7.7. தலைமை வாக்கியத்தில் தான் பதிலிடு பெயர்

துணைநிலை வாக்கியத்தில் உள்ள தலைமைப்பெயரைச் சுட்டுவதாக தலைமை வாக்கியத்தில் இப்பதிலிடு பெயர்கள் வருவதில்லை.

குழந்தை, தாயை மறத்தாலும் தாய் தன்னை மறப்பதில்லை

என்பது தவறான தொடர். ஆயினும், ஐங்குறுநூற்றில் ஒரு இடத்திலும் கலித்தொகையில் ஒரு இடத்திலும் இவ்வாறு வரக்காண்கிறோம்.

........................... கொடிச்சி
தானெம் அருளா ளாயினும்

யாத்தன் னுள்ளுபு மறந்தறி யேமே ஐங் 298.24

உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
சுடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்

உண்ணுநீ ரூட்டி வா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன் ........ கலி 51.6-9

### 3.7.8. செய்மைத் துணைநிலை வாக்கியங்களில் 'தான்' பதிலிடு பெயர்

களப்பு வாக்கியங்களில் இப் பதிலிடு பெயர் அடுத்துள்ள வாக்கியத்தில் உள்ள தலைமைப் பெயரையே சுட்டுமேயன்றி செய்மையில் உள்ள ஒரு பெயரைச் சுட்டுவதில்லை. எடுத்துக்காட்டாக,

குழந்தை தன்மை மறந்துவிட்டான் என்று கமலா நினைத்தாள்

என்ற வாக்கியத்தில் பதிலிடு பெயர் கமலாவைச் சுட்டுகிறது.

ஆனால்,

குழந்தை தன்னை மறந்துவிட்டான் என்று சீதா சொன்னதைக் கமலா நம்பவில்லை

என்ற வாக்கியத்தில் 'தன்' பதிலிடு பெயர் கமலாவைச் சுட்டுவதில்லை. ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்களில் நற்றிணையில் ஒரு இடத்தில் இவ்வகை வாக்கியத்தைக் காண முடிகிறது.

........................ குன்றநாடன்,
அடைதருந் தோறும் அருமைதனக் குரைப்ப
நப்புணர் வில்லா நயனி லோர் நட்பு
அன்ன வாகுக என்னான் நற் 165.5-8

### 3.7.9. தன்மை, முன்னிலைப் பதிலிடு பெயர்கள் தவிர்ப்பின்மை

துணைநிலை வாக்கியங்களின் தன்மை, முன்னிலைப் பதிலிடு பெயர்கள் எழுவாயாக வரின் தான் பதிலிடு பெயர்கள்

படர்க்கைப் பெயர்களைக் கூடச் சுட்டி வருவதில்லை.

நான் தன்னோடு வருவதைக் கண்ணன், விரும்பவில்லை என்று வருவதில்லை. பழந்தமிழ் இலக்கியங்களில் இவ்விதி காணப்படுவதில்லை.

நீயுந் தாயை யிவற் கென யான்றற்
கரைய வந்து விரைவினன் கவைஇ — *அகம் 16.13-14*

நீதற் பிழைத்தமை யறிந்து
கலுழ்ந்த கண்ணளெம் அணங்கன் னாளே — *அகம் 366.15-16*

நாந்த முண்மையி னுளமே ......... — *நற் 226.4*

யான்தன் மொழிதலின் ........... — *நற் 204.7*

யான்தற் கடவின் யாங்கா வதுகொல் — *குறு. 276.6*

யான்தன்க் குரைத்தனெ னாக — *குறு. 265.7*

யாந்தற் றொழுதனம் வினவ ....... — *புறம் 144.8*

என நாம்
தன்மலை பாட நயவந்து கேட்டருளி — *கலி.40. 30-31*

### 3.7.10. கு வேற்றுமைப் பெயர் எழுவாய்கள்

ஒருசில வினைகளில் 'கு' வேற்றுமைப் பெயர்களே எழுவாயாக வருதலையும் இவற்றைத் தான் பதிலிடு பெயர் சுட்டி வருதலையும் காணலாம்.

அவனுக்குத் தன் தங்கையைப் பிடிக்கும்.

இத்தகைய 'கு' வேற்றுமை எழுவாய்களைப் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆறு இடங்களில் காண்கிறோம். *(அகம் 200.6., குறள் 64, 68, 190, 244, 273)*

ஒருநாள் உறைந்திசி னோர்க்கும் வழிநாள்
தம் பதி மறக்கும் பண்பின் எம்பதி — *அகம் 200.5-6*

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் குறள் 64

### 3.7.11. அயல் கூற்றில் தான் பதிலிடு பெயர்

நேர்கூற்றில் வரும் தன்மை, முன்னிலைப் பதிலிடு பெயர்கள் அயல்கூற்றில் 'தான்' பதிலிடு பெயராக மாறுவதையும் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆறு இடங்களில் காண முடிகிறது.

............ தானே தரிக்கென வவரவி
உடன்பெய் தோரே யழல்வேட்டு .... பரி.5.40-41

தாம்வந்தார் தம்பா லவ ரொடு தம்மை
வருகென்றார் யார்கொவோ ஈங்கு கலி.85.30-31

அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா கலி.51.12-13

ஏஎ யிஃதொத்த னாணிலன் தன்னொடு
மேவேமென் பாரையும் மேவினன்
கைப்பற்றும் கலி. 62. 1-2

ஊடி இருந்தேமாத தும்மினார் யாம்
தம்மை நீடுவாழ் கென்பாக்கு அறிந்து குறள் 1312

..................... வேற்றொருவன்
நீணோக்கங் கண்டு நிறைமதி வாண்முகத்தைத்
தானோர் குரக்குமுக மாகென்றுபோன
கொழுநன் வரவே குரக்குமுக நீத்த
பழுமணி யல்குற் பூம்பாவை ...... சிலம்பு 21.19-23

### 3.7.12. வேறு வாக்கியத்தில் தலைமைப் பெயர்

தான் பதிலிடு பெயர் ஒரே வாக்கியத்தில் உள்ள படர்க்கைப் பெயர்களையே சுட்டக்கூடியது.

கண்ணன் வந்தான். தான் என் நண்பன்.

என்று கூறுதல் இயலாது. ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்களில்

மூன்று இடங்களில் இத்தகைய எடுத்துக்காட்டுகளைக் காண்கிறோம்.

....................... மனையோள்
எம்மொடு புலக்கு மென்ப
..................................
..................................
..................................
யாந்தன் பகையே மல்லேம் சேர்ந்தோர்
திருநுதல் பசப்ப நீங்குங்
கொழுநனுஞ் சாலுந்தன் னுடனுறை
பகையே அகம் 186.13-20

..................... பூங்கட் பேதை
தானறிந் தன்றோ விலளே .........
................................ என்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே குறு. 142.2-5

யான்தன் னறிவல் தானறி யலளே குறு.337.5

### 3.7.13. உணர்வு வாக்கியங்கள்

உணர்வு வாக்கியங்களில் 'தான்' பதிலிடு பெயர் எழுவாய் அல்லாத பெயர்களையும் சுட்டக்கூடியது.

தன் தந்தை இறந்த செய்தி ராமனுக்குத் துயரத்தை அளித்தது ..

போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள். ஆனால், இத்தகைய வாக்கியங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுவதில்லை.

மேலே கண்ட வண்ணம் பழந்தமிழில் 'தான்' பதிலிடு பெயர் பலவேறு வகைகளில் வந்திருப்பினும் இவற்றின் வரவு எண்ணிக்கை குறைந்த அளவிலேயே உள்ளது. படர்க்கை எழுவாய்ப் பெயர்களைச் சுட்டுவனவாகவே ஐந்நூறுக்கும் அதிகமான இடங்களில் இப்பதிலிடு பெயர் வந்துள்ளது.

செங்காற் பல்லி தன்துணை பயிரும் குறு. 16.4

........................... களிறுதன்
தூங்குநடைக் குழவி துயல்புறங் காப்ப அகம். 168.9-10

போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுக்கள். பழந்தமிழில் இப் பதிலிடு பெயர் வந்துள்ள தன்மையைக் கீழ்வரும் பட்டியல் காட்டும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதி | - | - | - | - | - | - | - | - | 8 |
| ஐங் | - | 1 | 1 | - | - | - | - | - | 24 |
| அகம் | - | 1 | - | - | 9 | 1 | - | 1 | 59 |
| நற் | - | - | - | 1 | 8 | - | - | - | 33 |
| குறு | - | - | - | - | 2 | - | - | 1 | 2 |
| புறம் | 1 | 3 | - | - | 5 | - | - | - | 63 |
| பத்து | - | 1 | - | - | - | - | - | - | 17 |
| பரி | - | - | - | - | - | 1 | 1 | - | 15 |
| கலி | 3 | 1 | 1 | - | 2 | 3 | 3 | - | 102 |
| குறள் | - | 12 | - | - | - | 1 | 1 | - | 53 |
| சிலம்பு | - | 2 | - | - | - | - | - | - | 55 |
| மணி | 3 | 1 | - | - | - | - | - | - | 60 |

1. பரஸ்பரப் பதிலிடு பெயர்

2. எழுவாய் அல்லாத பெயரைச் சுட்டுதல்

3. தலைமை வாக்கியத்தில் 'தான்' பதிலிடு பெயர்

4. சேய்மைத் துணைநிலை வாக்கியங்களின் 'தான்' பதிலிடு பெயர்

5. தன்மை, முன்னிலைப் பதிலிடு பெயர்கள் தவிர்ப்பின்மை

6. 'கு' வேற்றுமைப் பெயர் எழுவாய்கள்

7. அயல்கூற்றில் 'தான்' பதிலிடு பெயர்

8. வேறு வாக்கியத்தில் தலைமைப் பெயர்

9. படர்க்கை எழுவாயைச் சுட்டுதல்

## 3.8. பரஸ்பரப் பதிலீடு பெயர்கள் (Reciprocal Pronouns)

இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டோர் தம்முள் பரஸ்பரம் செய்துகொண்ட செயல்களைக் குறிப்பிடப் பயன் படுத்தப்படும் பெயர்கள் பரஸ்பரப் பதிலிடு பெயர்கள் ஆகும்.

இவை
தம் + உள்
தங்களுக்கு + உள் அவர்களுக்கு+உள்
ஒருவன் + வேற்றுமை உருபு + ஒருவன்
ஒருத்தி + வேற்றுமை உருபு + ஒருத்தி
ஒருவர் + வேற்றுமை உருபு + ஒருவர்
ஒன்று + வேற்றுமை உருபு + ஒன்று

என்ற அமைப்புகளில் வரும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் முதல் வகை அமைப்பும் (புறம் 1, கலி 3, மணி 3) ஆறாவது வகை அமைப்பும் (பரி 1) மட்டுமே காணக் கிடைக்கின்றன.

இருசுடர் தம்முள் நோக்கி யொரு சுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்கு — புறம் 65.7-8

ஒரோஒகை தம்முள் தழீஇ யொரொஒகை
ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும் — கலி 18.9-10

விலங்குந் தம்முள் வெரூஉம்பகை நீக்கி — மணி 10.63

காரிகைமது வொருவரினொருவர்
கண்ணிற் கவர்புற — பரி 11.68

1. மூவிடப் பெயர்கள்


தன்மை
முன்னிலை
படர்க்கை
ஒருமை
பன்மை
யான்
நான்
உளப்பாடு
யாம்
நாம்
விலக்கீடு
யாம்
நாம்
நாங்கள்
ஒருமை
நீ
பன்மை
நீர்
உயர்திணை
விரவுத்திணை
ஒருமை
தான்
பன்மை
தாம்
ஒருமை
பன்மை
ஆண்பால்
பெண்பால்
சேய்மை
அவர்
அண்மை
இவர்
இடை
சேய்மை
அவன்
அண்மை
இவன்
இடை
உவன்
சேய்மை
அவள்
அண்மை
இவள்
இடை
உவள்
அஃறிணை
ஒருமை
பன்மை
சேய்மை
அது
அண்மை
இது
இடை
உது
சேய்மை
அவை
அண்மை
இவை
இடை
உவை


2. வினாப் பதிலிடு பெயர்கள்
முன்னிலையாளர்
படர்க்கை
உயர்திணை
அஃறிணை
ஆண்பால்
யாவன்
எவன்
பெண்பால்
யாவள்
எவள்
பால்பகா
பதிலீடு பெயர்
யாவர்
யார்
ஒருமை
யாவது
யாது
பன்மை
யாவை


3. வரையறையில்லாப் பதிலிடு பெயர்கள்
எவனோ
எவளோ
எவரோ
யாரோ
எதுவோ
என்னவோ
யாரையாவது
எதையாவது
என்னவாவது

### 4. உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள்

- யாவரும்
- யாரும்
- யாவதும்
- யாதும்
- எதுவும்
- எவனும்
- எவரும்
- எவளும்
- எவையும்
- என்னதும்
- ஒன்றும்
- ஒருவரும்

## அடிக்குறிப்புகள்

1. "A word used for or instead of a noun" (Louis Gray, 1958:172)

2. "The first person pronouns are those that refer to the person or persons speaking" (Roberts, 1968:18)

3. "The second person 'you' refers to the person or persons spoken to" (Roberts, 1968:18)

4. "The third person pronouns he, she, it, they refer to some person or thing other than the speaker or the person spoken to" (Roberts, 1968:18)

## துணை நூல்கள்

*அகத்தியலிங்கம், ச. 1984, சொல்லியல்-1-பெயரியல், அண்ணாமலைநகர்: அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம்*

Jesperson, Otto. 1934, **Essentials of English Grammer,** New York: Holt, Rinehart and winston

Louis H.Gray, 1958, **Foundations of Language,** New York: The Macmillian Company

Roberts, Paul, 1968, **Modern Grammar,** Chicago Harcourt Brace and World Inc.